விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 120 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 05 செவ்வாய்க்கிழமை (18.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## சீரணி நாகபூசணி அம்பாள் மஹோற்சவம்

### கொடியேற்றத்துடன் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் மஹோற்சவம் நாளை 19ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

22ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆதீன கர்த்தா முருகேசு தம்பையா பரஞ்சோதி கமலாதேவி அறிவித்துள்ளார். (ம-7,9)

### எதிர்வரும் 25ஆம் திகதி

## வடக்கு, கிழக்கில் கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராகவும் ஏப்ரல் 25ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் முழுமையான கதவடைப்பு போராட்டத்தை நடத்த தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கல்வியங்காட்டிலுள்ள, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் 15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு!
நாளை புதன்கிழமை தொடக்கம்
**மேல் மாகாண மாதிரி பரீட்சை வினாத்தாள்**
உங்கள் வலம்புரியில் வெளிவரும்

### இலங்கையில்

## ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

(கொழும்பு)

இலங்கையில் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன.

பேராதனை போதனா வைத்தியசாலையில் குழந்தைகள் பிறந்துள்ள சம்பவம் நேற்று பதிவாகியுள்ளது. 15

### மல்லாகத்தில்

## ரயில் மோதியதில் முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மல்லாகம் பகுதியில் புகையிரதத்துடன் மோதியதில் முதியவரொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை 6.45 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. 15

### பண்ணை அம்மன் சிலை விவகாரம்

# அனைத்து இந்து அமைப்புகளும் மன்றில் முன்னிலையாக முடிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூசணி அம்மன் சிலை தொடர்பான மனு இன்று யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, அனைத்து இந்து அமைப்புக்களும் முன்னிலையாவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அனைத்து இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நேற்று மாலை நல்லை ஆதீன மண்டபத்தில் ஆதீன சுவாமிகள் தலைமையில் கூடி ஆராய்ந்தனர்.

இதன்போது பிரஸ்தாப நாகபூசணி அம்மன் சிலையை அதே இடத்தில் பாதுகாப்பதற்கு ஏதுவாக, அனைத்து இந்து அமைப்புகளும் நீதிமன்றில் முன்னிலைப் படுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாம்புக்கடிக்கு இலக்கான முன்னாள் போராளி உயிரிழப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவின் கிழவன் குளம் பகுதியில் வசித்து வந்த மாற்றுத்திறனாளியான 15

## அம்மன் சிலையைப் பாதுகாக்க எமது சட்டத்தரணிகள் முன்வர வேண்டும்

### சைவ சமயத் தலைவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைச் சுற்று வட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலையை அதே இடத்தில் தொடர்ந்து பாதுகாப்பதற்கு எமது சட்டத்தரணிகள் ஒன்றுபட்டுக் குரல்கொடுக்க வேண்டுமென சைவ சமயத் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பண்ணையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலையை அங்கிருந்து அகற்று 15

## வலி.வடக்கு முன்னாள் தவிசாளர் வீட்டுக்குச் சென்று

### தீ மூட்டிய பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுகிர்தனின் வீட்டு வளாகத்தில் தற்கொலைக்கு முயன்ற குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் பணிபுரியும் பால கிருஷ்ணன் விஜிதா (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஏழாலை பகுதியில் உள்ள முன்னாள் தவிசாளரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற 15

### கடற்படை சிப்பாய்

## முல்லையில் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கோட்டாபய கடற்படைத் தளத்தில் பணியாற்றிவந்த கடற்படை வீரர் ஒருவர் கோட்டாபய கடற்படைத் தளத்தில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15

### இலங்கை தோல்வியுற்ற நாடு

# அரசியலமைப்பு ஜனநாயகமானதல்ல

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

இலங்கை ஒரு தோல்வியுற்ற நாடு. தற்போதைய அரசியலமைப்பு ஜனநாயகமானதல்ல என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டின் யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதுவர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர் தாயகத்தில் இடம்பெறும் இன அழிப்புக்கு எதிராக ஒன்றிணையுங்கள்

## சிறீதரன் எம்.பி. அழைப்பு



(கிளிநொச்சி)

**தமிழர் தாயகத்தில் செயலுருப்பெறும் இன அழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு சிறீதரன் எம்.பி.அழைப்பு விடுத்துள்ளார். தமிழர் தாயகத்தில் செயலுருப்பெறும் இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தக்கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் எற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

தியாகத்தாய் அன்னைபூபதி அவர்களின் நினைவுநாளான 2023.04.19 ஆம் திகதி, புதன் கிழமை, மு.ப.9.00 மணிக்கு, கிளிநொச்சி சேவைச் சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ள குறித்த அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் இணைந்து கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

- ➢ தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க வலியுறுத்தல்.
- ➢ வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதியைப் பெற்றுக்கொடுத்தல்.
- ➢ அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்த வலியுறுத்தல்.
- ➢ சமகாலத்தில் இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த அரச திணைக்களங்களால், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்தல்.
- ➢ அட்டைப் பண்ணைகள், இறால் பண்ணைகள் அமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் கடல்வள அபகரிப்பை கைவிடக் கோரல்.
- ➢ சீன நாட்டின் முதலீட்டாளர்களுக்கு கிளிநொச்சியின் காணிகளை தாரைவார்ப்பதை தடுத்து நிறுத்தல்.

உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, பன்னாட்டு சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையால் மேற்கொள்ளப்படும் இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம-7,9)





**யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலைக்கு இந்து மதப் பிரதிநிதிகளால் நேற்று விசேட பூசை இடம்பெற்றது.**

# 13 ஆவது திருத்தசட்டம் தொடர்பில் ஆளுநருடன் விக்னேஸ்வரன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் தனக்கு உள்ள சந்தேகங்களை தீர்க்கும் முகமாக முன்னாள் வடக்குமாகாண முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடினார்.



இன்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம், கோவில் வீதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாண முன்னாள் கல்வியமைச்சர் சர்வேஸ்வரன், முன்னைய ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் செயலாளராக பதவிவகித்த வைத்தியர் விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டார்.

சுமார் 1.30 மணி நேரமாக இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

13ஆம் திருத்தச்சட்டம் தொடர்பிலும் அதன் குறைபாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தோம். இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக தற்போதைய அரசாங்கம் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் முனைப்புக் காட்டி வருகின்றது.

மேலும் மாவட்ட அபிவிருத்தி சபைகளில் மாகாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சரும், மாகாண முதலமைச்சரும் மாத்திரமே பதவியில் இருக்கமுடியும், ஆளுநர் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் தலைவராக இருக்கமுடியாது என்பதனையும் சுட்டிக்காட்டினேன் என்றார். அனைத்துத்தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

(ம-7.9.33.104)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்

திரு. நாகலிங்கம் கமலநாதன்

(அகில இலங்கைத் திருமுறை மன்ற வாழ்நாள் உறுப்பினர்)

மேற்படி எமது மன்றத்தின் உறுப்பினர் அவர்கள் நேற்று (17.04.2023) காலமாகிவிட்டார்

இணுவையூரின் தவப்புதல்வரும் தன்னடக்கத்தின் மறுவடிவமும், தித்திக்கும் தீந்தமிழ்த் திருமுறையை எத்திக்கும் ஓதி உளம் குளிர்வித்த செம்மலும் ஆவார். அன்னார் முட்டறுத்துப், பொருள் உணர்ந்து பாடிப் பரவசமூட்டவல்ல ஓதுவார். மெய்தான் அரும்ப, விதிர் விதிர்க்க, ஊன் உருக, உள்ளொளி பெருக இனி உமைப் போல் திருவாசகம் ஓத எம்மிலே யாருளர். உம் பிரிவால் வாடி ஆத்மா தில்லைக்கூத்தன் திருவடியில் திளைக்க வேண்டும் என வேண்டுகின்றோம்.

செ. பாலச்சந்திரன் செயலாளர்.

(C-6373)

அகில இலங்கைத் திருமுறை மன்றம், யாழ்ப்பாணம்.

## என்றும் மறவோம்

மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவில் தற்போது வசித்தவருமாகிய

திருமதி தனலட்சுமி குணரத்தினம் (மணி)



தோற்றம் : 30.11.1940

மறைவு : 14.04.2023

மூளாய் நாகலிங்கம் (வெலிமடை நாதன் ஸ்ரோர்ஸ்) மீனாட்சி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை குணரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், வினோதினி கனகசாங்கரி, நிமலன் ஆகியோரின் அருமைத் தாயாருமாகிய திருமதி தனலட்சுமி குணரத்தினம் (மணி) அவர்கள் கனடாவில் காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குரும்பசிட்டி ஸ்ரீ முத்துமாரியம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-6374)

தங்க. முகுந்தன் குடும்பம் - மூளாய் 077 727 9238


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக வெப்பம் மரணத்தையும் ஏற்படுத்தலாம்

## சிரேஷ்ட பேராசிரியர் இந்திக கருணாதிலக

(கொழும்பு)

**நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலை குழந்தைகள், முதியவர்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வெயிலில் அதிக நேரத்தை செலவிடுபவர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய அபாயம் காணப்படுகிறது.**

அதிக வெப்பத்தை உள்ளீர்த்தலால் ஏற்படக் கூடிய நீர்ச்சத்து குறைபாடானது மரணத்தையும் ஏற்படுத்தக் கூடியது என கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட சிரேஷ்ட பேராசிரியர் இந்திக கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது நிலவும் மிகவும் வெப்பமான காலநிலை குழந்தைகள், முதியவர்கள் மற்றும் அதிகளவில் வெயிலில் அன்றாட செயற்பாடுகளில் அல்லது தொழிலில் ஈடுபடக் கூடியவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும். எனவே இந்தக் குழுவினர் அநாவசியமாக வெயிலில் செல்வதை நிச்சயம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவர்கள் உள்ளிட்ட ஏனைய அனைவரும் இவ் அதிக வெப்பத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஆடைகளை அணியும் போதும் இள நிறத்தில் அணிவது பொருத்தமானதாகும்.

அத்தோடு அதிகளவில் நீர் அருந்துதல் மிக முக்கியத்துவமுடையதாகும். எனவே நாளொன்றுக்கு சுமார் இரண்டரை லீற்றர் நீர் அருந்துதல் பொருத்தமானது.

நீர் ஆகாரங்கள் அல்லது நீர் தன்மையுடைய உணவுகளை அதிகளவில் உட்கொள்ள வேண்டுமே தவிர, குளிர் பானங்களை அளவுக்கதிகமாக அருந்துவது பொருத்தமற்றது.

இதன் காரணமாக ஏனைய பாதிப்புக்கள் ஏற்படக் கூடும். அதிக வெப்பம் காரணமாக மயக்கம், சோர்வு மற்றும் வாந்தி உள்ளிட்ட நோய் அறிகுறிகள் ஏற்படக் கூடும். திடீரென இவ்வாறான நோய் அறிகுறிகள் தென்படுபவர்கள் உடனடியாக வைத்தியர்களை நாட வேண்டியது அவசியமாகும்.

அதிக வெப்பம் காரணமாக நீர்ச்சத்து குறைபாடு ஏற்படும் போது மரணம் ஏற்படக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன. எனவே குழந்தைகள், முதியோர், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட சகலரும்தமதுசுகாதார நிலைமை தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# கார் பள்ளத்தில் விழுந்ததில் வெளிநாட்டு பிரஜை பலி

(கொழும்பு)

கம்பளை - ஹெம்மாத்தகம, தாரா வங்குவ என்ற இடத்தில் மகிழுந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அவுஸ்திரேலிய சுற்றுலாப் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் மரணித்த அவுஸ்திரேலிய பிரஜையின் மகளும், மகிழுந்தின் சாரதியும் காயமடைந்துள்ளனர்.

மகிழுந்தின் சாரதி, வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணொருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் அவுஸ்திரேலியாவின் சிட்னியைச் சேர்ந்த 67 வயதுடைய ஒருவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துகள் 26 வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பல விபத்துகளில் 26 வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

விபத்துகள் காரணமாக நெடுஞ்சாலையில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பெரும்பாலான வாகனங்களுக்கு முன் மற்றும் பின் பகுதிகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


வாகனங்களுக்கு இடையே இடைவெளி விட்டு செல்லாமையினால் இந்த விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# மே தின கூட்டங்களை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானம்

(கொழும்ப)

மே தின பேரணிகளையும் கூட்டங்களையும் இம்முறை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக்கட்சி என்பன கொழும்பை மையப்படுத்தியே மே தினக் கூட்டங்களையும் பேரணிகளையும் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் நிகழ்வுகளும் கொழும்பிலேயே நடைபெறவுள்ளன. (நி)

# இம்மாதம் 20 ஆம் திகதி அரிய வகை சூரியகிரகணம்



(கொழும்பு)

நாளை மறுதினம் வியாழக்கிழமை ஒரு அரிய வகை சூரிய கிரகணம் ஏற்பட உள்ளதாக நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார்.

இது அரிய கலப்பின சூரிய கிரகணம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் உலகின் சில பகுதிகளில் இது வளைய கிரகணமாக தோன்றும் முன், முழு கிரகணமாக மாறும் என்று கூறப்படுகிறது.

சந்திரன் சூரியனை முழுவதுமாக மறைக்காது. அதற்கு பதிலாக, அது சூரியன் மீது ஒரு சிறிய இருண்ட வட்டு போல் தோன்றும். இது "நெருப்பு வளையம்" விளைவை உருவாகிறது என தெரிவித்துள்ளார்.

"பூமியைச் சுற்றியுள்ள சந்திரனின் சுற்றுப்பாதை நீள் வட்டமாக இருப்பதால், பூமியிலிருந்து சந்திரனின் தூரம் அதன் சராசரி மதிப்பீட்டிலிருந்து சுமார் 6% மாறுபடும்.

உலக சனத்தொகையில் 8.77 வீதமானவர்களுக்கு மட்டுமே சூரிய கிரகணம் தெரியும் எனவும், இலங்கை மற்றும் உலகின் பல பகுதிகளுக்கு இது நேரடியாகத் தென்படாது எனவும் பேராசிரியர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கலப்பின கிரகணங்கள் மிகவும் அரிதானவை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் கலப்பு சூரிய கிரகணம் ஏற்பட்டது. மற்றும் அடுத்த கலப்பின சூரிய கிரகணம் நவம்பர் 2031 இல் நிகழும் என அவர் தெரிவித்தார். (நி)

# மக்காக் குரங்குகளை வழங்குமாறு அமெரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

சீனாவுக்கு 100,00 குரங்குகளை வழங்குவதற்கு இலங்கை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இந்நிலையில், இந்த டோக் மக்காக் குரங்குகளை தமக்கும் வழங்குமாறு அமெரிக்கா கோரிக்கை முன்வைத்துள்ளது.

உலக அளவில் அழிந்து வரும் இனமாக டோக் மக்காக் குரங்குகள் உள்ளதுடன், இலங்கையில் வெகுவாக பெருகி எண்ணிக்கையில் 30 இலட்சத்தை கடந்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா குறித்த குரங்குகளுக்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 2024 தேர்தல் வருடமாக அமையும்?

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு இலங்கையில் தேர்தல் வருடமாக அமையும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இதற்கமைய, 2024 இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் என்பன இடம்பெறக்கூடும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முதலில் உள்ளூராட்சிசபைத் தேர்தலும் அதன்பின்னர் ஜனாதிபதி தேர்தலும் நடைபெறும் எனவும் அதன்பின்னரே ஏனைய தேர்தல்கள் குறித்து முடிவெடுக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் இவ்வருடத்துக்குள் நடைபெறும் எனக் கூறப்பட்டாலும் அதற்கான சாத்தியம் குறைவு எனவும் அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் தென் மாகாணத்தை பார்வையிட வந்துள்ளதாக கூறப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகள் உனவடுன சுற்றுலா வலயத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்ட போட்டி வவு. யங்ஸ்ரார் சம்பியன்



Youth Master DSP for future னால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் வவுனியா யங்ஸ்ரார் அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனது.

இதன் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை நாவற்குழி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் வவுனியா யங்ஸ்ரார் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து அணி மோதியது. நான்கு கால் பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதல் இரு கால்பகுதி ஆட்டங்களிலும் சண்டிலிப்பாய் இந்து அணி 7:5, 15:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தனர். மூன்றாவது கால் பகுதி ஆட்டத்தில் வவுனியா யங்ஸ்ரார் அணி தமது அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தி .16:16 என புள்ளிகளின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினர். இதனால் நான்காவது கால்பகுதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. இதில் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 25:25 என்ற புள்ளிகளைப் பெற்று ஆட்டத்தில் சமநிலையை ஏற்படுத்தினர். இதனால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது.

இதில் வவுனியா யங்ஸ்ரார் அணி 33:32 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. சிறந்த வீராங்கனையாக வவுனியா யங்ஸ்ரார் அணியை பிரதிநிதித்துவம் செய்த மதுமிதா தெரிவு செய்யப்பட்டார். (4)


# ஐ.பி.எல் போட்டியில் மோதல் ஹர்திக்- ராணாவுக்கு அபராதம்

ஐ.பி.எல் போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் 5 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்சை தோற்கடித்து மும்பை அணி 2 ஆவது வெற்றியை பெற்றது.

கொல்கத்தா 3 ஆவது தோல்வியை தழுவியது. இந்தப் போட்டியின் போது கொல்கத்தா அணி கப்டன் நிதிஷ்ராணாவுக்கும் மும்பை சுழற்பந்து வீரர் ஹர்திக் ஷோகீனுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதுகுறித்து போட்டி நடுவர் விசாரணை மேற்கொண்டனர். இருவரும் வீரர்களின் நடத்தை விதியை மீறியது கண்டறியப்பட்டது. இருவரும் தங்களது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதை தொடர்ந்து இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது.

கொல்கத்தா கப்டன் நிதிஷ் ராணாவுக்கு போட்டியில் இருந்து பெற்ற பணத்தில் 25 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டு உள்ளது. மும்பை அணியின் சுழற்பந்து வீரர் ஹர்திக்கு 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2811

தசாங்கன்




யாதுஷா




வதனா




மதுமிதன்




தினேஸ்




ரஜிதரன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசு யோசனையை நிராகரிக்க டலஸ் அணி தீர்மானம்

(கொழும்பு)

தேசிய இணக்கப்பாட்டு அரசொன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை ஏற்காதிருக்க டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை தீர்மானித்துள்ளது.



டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட மொட்டுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்தே சுதந்திர மக்கள் சபையை நிறுவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம், மத்திய வங்கிச் சட்டம் போன்ற விடயங்களில் கொள்கையளவில் உடன்பட முடியாது என்பதாலேயே தேசிய அரசு யோசனையை நிராகரிக்க டலஸ் அணி தீர்மானித்துள்ளது.

அதேவேளை, பரந்துபட்ட எதிரணிக் கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு டலஸ் அணி போராடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# காசநோய் அதிகமாக பரவும் அபாயம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் காசநோய் அதிகமாக பரவும் அபாயம் காணப்படுவதாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காசநோய் தடுப்பு தொடர்பான பொது விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட அவர், காசநோய் குறித்த மக்களின் அறியாமையும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் 331 காசநோயாளிகள் கண்டறியப்பட்டனர்.

இதில் 30 பேர் உயிரிழந்துள்ள நிலையில், இது கண்டறியப்பட்ட நோயாளர்களில் சுமார் 10 சதவீதம் என்பது கவலைக்குரிய விடயம் என சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 14 ஆயிரம் காசநோயாளிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டாலும் பத்தாயிரம் பேர் மட்டுமே கண்டறியப்படுகின்றனர்.

சுமார் 4000 நோயாளர்கள் பதிவாகாமல் இருப்பதற்கு அறியாமையே முக்கிய காரணம் என இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் தொடர்பான நிபுணர் வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (நி)


மணிவிழா வாழ்த்து

திரு. நீலகண்டர் கருணாநிதி (S.L.T.S-1)

(சிரேஷ்ட ஆசிரியர் யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)



சேவை விபரம்

கிளி/ கிராஞ்சி அ.த.க பாடசாலை
25.03.1998-31.05.1999
கிளி/பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம்
01.06.1999-18.06.2001
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
19.06.2001-30.06.2003
கிளி/பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம்
01.07.2003-28.02.2007
யா/சென்.றோக் வித்தியாலயம்
01.03.2007-31.03.2015
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
01.04.2015-18.04.2023

18.04.2023 இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. நீலகண்டர் கருணாநிதி ஆசிரியர் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம் மேலும் அவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்- பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

(15286)


# நிபந்தனைகளின் அடிப்படையில் அரசியலில் ஈடுபட தயார்

## ஜனக ரத்நாயக்க



(கொழும்பு)

சில நிபந்தனைகளின் அடிப்படையில் அரசியலில் ஈடுபட தயார் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனகரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களையும் வலுப்படுத்தும் ஊக்கப்படுத்தும் இலங்கையை சிறந்த நாடாக மாற்றும் சிறந்த திட்டத்தை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தால் நான் அதனை ஏற்க தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் சிறந்த நிர்வாகத்தையும் பக்கச்சார்பற்ற செயற்திறன் மிக்க தனிநபர்களையும் எதிர்பார்க்கின்றனர்.

சில அரசியல்வாதிகளும் உயர்குழாமை சேர்ந்த குடும்பத்தினரும் கடந்த 75 வருடமாக மக்களின் வாழ்க்கையில் விளையாடி வருகின்றனர். ஆகவே அனைவரினதும் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றங்களை மேற்கொள்வதற்கு நான் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

18.04.2023
சித்திரை 05, செவ்வாய்க்கிழமை
திரயோதசி பிற்பகல் 1.22 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 1.06 மணிவரை
சுபநேரம் -10.33-12.03 மணிவரை
இராகுகாலம்-3.03-4.33 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம் - ஆயிலியம்,மகம்

வள்ளுவன்

**மேஷம்** வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பிறர் உதவியுண்டு.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, மனச்சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், நண்பர்களால் நன்மைகள் ஏற்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சகோதர வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், ஆரோக்கிய ம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** குடும்பத்தினரிடம் முன் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து செய்கின்ற பாவத்தை அழுது அழுது தொலைக்க வேண்டும்.

# புதிய பயங்கரவாத சட்ட மூலத்தை கொண்டு வந்தோரும் அதில் சிக்கலாம்

## சமத்துவக் கட்சி சுட்டிக்காட்டு

(தருமபுரம்)

இந்த ஆட்சி மாறிப் புதிய ஆட்சி ஒன்று அமையுமிடத்து, இந்தச் சட்டத்தின் பாரதூரத் தன்மையை இதைக் கொண்டு வந்தோரும் முன்மொழிந்தோரும் கூட அனுபவிக்க நேரலாம்.

ஆகவே நாட்டின் மேம்பாட்டுக்குரிய வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமே தவிர, எந்த நிலையிலும் அதற்கு எதிராக மக்களைக் கட்டுப்படுத்தி ஒடுக்குவதைப் பற்றிச் சிந்திக்கவே கூடாது என சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் அபாயகரமான சட்டமாகவே உள்ளது.

இது நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் பாதிப்பை நிச்சயமாக உண்டாக்கும்.

மேலும் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதுடன், நீதித்துறையையும் பலவீனப்படுத்தும். அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி போன்றவற்றிலிருந்து மீள வேண்டிய நிலையில் உள்ள நாட்டை எதிர் நிலைக்குள்ளாக்கி, ஜனநாயக நெருக்கடிக்குள்ளும் தள்ளிவிடும். இந்தத் தவறினை அரசாங்கம் செய்யக்கூடாது "நாட்டிலே தீர்வின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்ற இனப்பகை, அதன் விளைவானஅரசியல் நெருக்கடி. நாட்டை ஸ்தம்பித நிலைக்குள்ளாக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றிற்குத் தீர்வைக் கண்டு நாட்டை மீட்டெடுக்க வேண்டியுள்ளது.

இந்த ஆட்சி மாறிப் புதிய ஆட்சி ஒன்று அமையுமிடத்து, இந்தச் சட்டத்தின் பாரதூரத் தன்மையை இதைக் கொண்டு வந்தோரும் முன்மொழிந்தோரும் கூட அனுபவிக்க நேரலாம்.

எனவே இந்தப் புதிய பயங்கரவாதச் சட்டத்தினை நாட்டின் மேம்பாட்டிலும் பாதுகாப்பிலும் கரிசனை கொண்ட அனைவரும் மறுதலித்து எதிர்க்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6)

# இறைச்சிக்காக கொண்டு சென்ற நான்கு ஆடுகள் மீட்பு



(கரணவாய்)

இறைச்சிக்காக வெட்டுவதற்கு கொண்டு சென்ற நான்கு ஆடுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

நெல்லியடி பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நான்கு ஆடுகளும் துன்னாலை குடவத்தை பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த ஆடுகள் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கவில்லை என்று உரியவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸாரால் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-6-60)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சைக்கிள் ஓட்ட போட்டியில் நவாலியைச் சேர்ந்த பாலசிங்கம் கிருஷ்ணா முதல் இடத்தை பெற்றார்.

அவருக்கான துவிச்சக்கர வண்டியினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கி வைத்தோடு லுமாலா சைக்கிள் நிறுவனம் குறித்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்:-கஜிந்தன்)

# எல்லை மீள் நிர்ணயத்தில் உள்ள குறைபாடுகளை தெரிவியுங்கள்

## சமூகமட்ட அமைப்புக்களிடம் சிறீதரன் எம்.பி கோரிக்கை

(தருமபுரம்)

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிர்ணய வரைவு அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதாகவும் அது தொடர்பில் மக்களிடத்தே அதிருப்தி நிலவுவதையும் அவதானிக்க முடிவதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் எவையும் பெறப்படாமலேயே இவ் எல்லை மீள்நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, மக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, நிர்வாகத் தொடர்பு, சமூக ஊடாட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட காரணிகள் கருத்திற் கொள்ளப்படாமை மாவட்டத்தின் சமூக, அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரத்தன்மையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பில், அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புக்கள் தங்களின் எழுத்து மூல பரிந்துரைகளை, எல்லை மீள்நிர்ணயக் குழுவின் மாவட்டத் தலைவரான அரசாங்க அதிபருக்கு முகவரியிட்டு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு பிரதியிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம், உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும் எனத் தெரிவித்தார். (4-6-316)

# கொக்குவிலில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் கைது

(அராலி)

நீண்ட காலமாக காங்கேசன் துறை வீதி கொக்குவில் பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தநபர் ஒருவர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 35 வயதுடைய கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் நீண்டகாலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஒரு தொகுதி கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-6-33-104)



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி சங்குப்பிட்டி பாலத்தை அண்மித்த கடற்கரையோரப் பகுதிகள் படையினரால் தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(படம்:-யதுபாஸ்கரன்)

# நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வெற்றிகரமான பாதையில் நாடு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

ஒருவருக்கு நோய் ஏற்படும் போது வழங்கப்படுகின்ற வலி நிவாரணிகள் நோயாளியை தற்காலிகமாக குணப்படுத்தும் என்றும் ஆனால் அடிப்படை நோய்க்கு சிகிச்சையளிப்பதே மிகவும் அவசியமானது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரான்ஸிலுள்ள இலங்கையர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி நெருக்கடிகளை ஒவ்வொன்றாக தீர்த்து நாட்டை மீண்டும் வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டு வருகிறார். அவருக்கு எதிராக அரசியல் செய்த நாமே, இன்று அவருடன் கைகோர்த்து புரிந்துணர்வுடன் செயற்படுகின்றோம்.

ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப இந்த புரிதல் தேவை. சமீபகாலமாக, நாட்டின் கட்டுமானம் மற்றும் சுற்றுலாத் துறை சரிந்து உள்ளது.

இப்போது அவை கொஞ்சம் கொஞ்சமாக புத்துயிர் பெற்று வருகின்றன. எனது அமைச்சும் நாட்டுக்கான டொலர்களைக் கண்டுபிடிக்கும் புதிய திட்டத்தைத் தொடங்கியது.

வெளிநாட்டில் இருந்து கொண்டு நீங்கள் டொலர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம். நாங்கள் ஏற்கனவே ஏராளமான வீடுகளை டொலர்களுக்கு விற்று விட்டோம்.

அந்த பணம் எனக்கானது அல்ல, நாட்டின் பொருளாதாரத்திற்கானது. பொருளாதாரம் வளர்ந்தால் மக்களுக்கு நிம்மதி கிடைக்கும் என்று அர்த்தம்.

இலங்கையில் ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த நிலை இல்லை. வரிசையில் நிற்கும் காலம் முடிந்து விட்டது. மின்சாரம் துண்டிக்கப்படாது.

எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. அடுத்த சில மாதங்களில் மின்கட்டணத்திலும் ஓரளவு நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகிறேன். அடுத்த ஒன்றரை வருடங்கள் மக்களுக்கு இன்னும் சிறப்பாக அமையும் என்றும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டில் 14 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டு தினமான ஏப்ரல் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் வீதி விபத்துக்களால் 14 மரணங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் பெருமளவானோர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். (நி)


## பதவி வெற்றிடம்

- **தமிழ் டைப்பிங்/ பக்க வடிவமைப்பாளர்**
  அனுபவமுள்ளவர்கள்/பயிலுநர்கள் (இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்**
  (பெண்கள்)
- **இயந்திர இயக்குநர்/பயிலுநர்**
  (ஆண்கள்/ இரவுக் கடமை - கல்வித் தகைமை -க.பொ.த சாதாரண தரம்)

பதவி வெற்றிடங்களுக்கான வயதெல்லை -25 இற்கு மேல்

**யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.**

தொடர்புகளுக்கு- **076 097 3121**

## பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள்

# கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவை

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக

பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-

சேவைக்கட்டணம் 500 /-



தொடர்பு - கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com


## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம் பிற்போடல்

22.04.2023 அன்று நடைபெற இருந்த ஆண்டுப் பொதுக்கூட்டம், கணக்கறிக்கைகள் பூரணம் அடையாமை காரணமாக பிற்போடப்படுகிறது.

புதிய திகதி உறுப்பினர்களுக்கு காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

(c-6371)

**திரு.லோ.துஷிகரன்,**
**செயலாளர்.**

# சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தமது சேவைக் காலத்தை நிறைவு செய்து ஓய்வுபெறும் ஆசிரியர்களை ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.



### கே.ஸ்ரீதரன்

B.Sc (Dip-in-Ed)

யா/வேம்படி மகளிர் கல்லூரி
1993-2017
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
2017-2022



### திருமதி.சித்திரலதா கந்தசாமி

BSc (Dip-in-Ed), SLTS-I

10.11.1988-06.06.1993 (ஆசிரியர்)
கிளி/முருகானந்தா கல்லூரி, முரசுமோட்டை
07.06.1993-15.02.1998 (ஆசிரியர்)
கிளி/ பளை மத்திய கல்லூரி
16.02.1998-04.04.2018 (ஆசிரியர், பகுதித்தலைவர்)
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
05.04.2018-31.12.2022 (பகுதித்தலைவர்)
யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

Best Wishes

### திருமதி.மலர்விழி நாகேஸ்வரன்

(பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்)

| | |
|---|---|
| பதுளை/கஹகொல்லை தமிழ் வித்தியாலயம் | 16.04.1985-31.08.1986 |
| ப/அப்புத்தளை த.ம.வி | 01.09.1986-24.02.1987 |
| க/ஆங்கில ஆசிரியர் ப.க | 25.02.1987-31.12.1988 |
| ப/கோணமுட்டாவை த.வி | 01.01.1989-22.02.1991 |
| ப/அப்புத்தளை த.ம.வி | 23.02.1991-24.04.1996 |
| வ/வவுனியா த.ம.ம.வி | 25.04.1996-28.02.2002 |
| தி/ஸ்ரீ சண்முகா இ.ம.க | 01.03.2002-06.09.2011 |
| யா/யாழ்ப்பாணம் இ.க | 07.09.2011-31.12.2022 |



### பஞ்சாட்சரம் ஜெகசீலன்

B.A.Dip-in-Edu

முதல் நியமனம்:- கல்வி அபிவிருத்தி திட்ட உதவியாளர்
வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி
1994-1997
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
1997-2018 (ஆசிரியர்)
யா/இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்
2018-2023 (ஆசிரியர்)

பொறுப்புக்கள்
2019 - தமிழ்ச்சங்கத் தலைவர்
2020-2022 - விவாதமன்றம் (பொறுப்பாசிரியர்)



வாழ்த்துவோர்:- ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(c-6372)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 127

# முயற்சியின்மை

ராமு என்கிற பெரிய சோம்பேறி ஒருவன், குறுக்கு வழியில் எப்படியாவது பணம் சம்பாதித்து விடவேண்டும் என்ற எண்ணம் உடையவன். ஒரு நாள் அவன், ஊருக்கு வந்திருந்த மிகப்பெரிய ஜோதிடர் ஒருவரை சந்தித்து, தனது எண்ணத்தை தெரிவித்தான்.

அதற்கு அந்த ஜோதிடர், உனக்கு லாட்டரி டிக்கெட்டில் 75 லட்சம் ரூபாய் அடிக்கப் போகின்றது என்று கூறினார். இதை கேட்ட ராமு, பரபரப்போடு அந்த ஜோதிடரை பார்த்து, உண்மையாகவா? எனக்கா? எப்பொழுது பரிசு விழும்..? எனக்கு பரிசு விழுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்..? என ஜோதிடரை கேட்டான்.

அதற்கு அந்த ஜோதிடர், மனம் தளராமல் நீ எப்பொழுதும் இறைவனை வழிபட்டுக் கொண்டிரு..! உன்னுடைய பக்தியை பொறுத்தே அந்த பரிசு உனக்கு விழும் என்று கூறிச் சென்றார்.

அன்று முதல், அவன் ஒவ்வொரு கோவில்களுக்கும் சென்று வழிபட ஆரம்பித்தான். ஆனால் பரிசு விழவில்லை. சோர்வடைந்த அவன் அடுத்து தேவாலயங்களுக்கு சென்று வழிபட ஆரம்பித்தான். அதிலும் அவனுக்கு பலன் கிடைக்காததால் மசூதிக்குச் சென்று வழிபடத் தொடங்கினான். அதிலும் பரிசு விழுந்த பாடில்லை.

எனவே விரக்தியின் உச்சியில் சென்ற ராமு, ஒரு பெரிய மலையில் ஏறி நின்று கடவுளைப் பார்த்து, எனக்கு இப்பொழுது 75 லட்ச ரூபாய் பரிசு விழவில்லை என்றால் நான் மலையில் இருந்து குதித்து இறந்து விடுவேன் என்று உரக்கக் கத்தினான். ஆனால் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. கோபத்தின் உச்சியில் சென்ற ராமு, மலை உச்சியிலிருந்து குதித்து உயிரை விட்டான்.

அதே கோபத்தோடு விண்ணுலகம் சென்ற ராமு, கடவுள் இருக்கும் அறைக்கு முன்பாக சென்று கத்த ஆரம்பித்தான். என்னை ஏன் ஏமாற்றினாய்..? எனக்கு ஏன் பரிசு விழவில்லை..? என்று கூறிக் கத்திக் கொண்டே இருந்தான்.

சத்தத்தைக் கேட்டு வெளிவந்த கடவுளின் உதவியாளர், யார் நீ..? எதற்காக இங்கே வந்து கத்துகிறாய்..? என்று கேட்டான். கடவுளின் உதவியாளரிடம் நடந்த விடயங்களை அனைத்தையும் கூற, கடவுளின் உதவியாளருக்கும் கடவுள் மீது சற்று கோபம் உண்டாயிற்று. என்ன இந்தக் கடவுள்..! இவ்வளவு பக்தியாக இருந்த பொழுதும், இப்படி ஒரு அப்பாவியை ஏமாற்றி விட்டாரே..! என்று கூறிக்கொண்டே கடவுளின் உதவியாளர் அவனுடன் சேர்ந்து கத்த ஆரம்பித்தார்.

அந்த நேரத்தில் அறையை விட்டு வெளிவந்த கடவுள், அவர்கள் இருவரையும் பார்த்து, அமைதியாக இருங்கள்..! உங்களுக்கு என்ன பிரச்சினை..? என்று கேட்டார். அதற்கு கடவுளின் உதவியாளர், இவன் அவ்வளவு முயற்சி எடுத்தும், நீங்கள் இவனை ஏமாற்றி விட்டீர்களே! இதற்கு நீங்கள் கட்டாயமாக பதில் சொல்லித் தான் தீர வேண்டும் என்றார்.

உடனே கடவுள், உதவியாளரை பார்த்து, இத்தனை முயற்சி எடுத்தானே! அவன் ஒரு முறையாவது லாட்டரி டிக்கெட் வாங்கினானா..? என்று அவனிடம் கேள் என்றார். கடவுளின் உதவியாளர் ராமுவை பார்த்து லாட்டரி டிக்கெட் வாங்கினாயா..? எனக் கேட்க ஐயோ நான் அதை மட்டும் மறந்து விட்டேன்..! என்று கூறினான்..

இந்தக் கதையை போலத்தான் நாமும் எதையாவது ஒன்றை வேண்டும் என்று கடவுளிடம் கேட்டுக்கொண்டே இருக்கின்றோம். கடவுள் எப்பொழுதுமே கேட்டவற்றை கொடுக்க விரும்புகிறார். ஆனால் கடவுள் போதுமான முயற்சியை மட்டும் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். எந்த முயற்சியும் இல்லாத பொழுது, கடவுள் யாருக்கும் எதையும் கொடுப்பதில்லை.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய
# சிலைகள், செப்பேடுகள் சீர்காழியில் கண்டெடுப்பு



(சென்னை)
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் புகழ்பெற்ற சட்டநாதர் கோவில் உள்ளது.

இந்தக் கோவிலில் 32 ஆண்டுகளுக்கு பினனர் எதிர்வரும் மே மாதம் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாகசாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றது.

அப்போது அங்கே 22 ஐம்பொன் சிலைகள், 55 பீடம்,100 இற்கும் மேற்பட்ட செப்பேடுகள், பூஜை பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட சிலைகள் அனைத்தும் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கக் கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், சிலைகளின் மதிப்பு பல கோடி இருக்கும் என கூறப்படும் நிலையில், சம்பவ இடத்திற்கு தொல்லியல் துறை அதிகாரிகள் விரைந்துள்ளனர்.

கோவிலில் பல சிலைகள் மற்றும் பூஜை பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், அதனை பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டு வருகின்றனர். (நி)

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு
## நால்வர் உயிரிழப்பு 28 பேர் காயம்

(வோஷிங்டன்)
அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், 28 பேர் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் சம்பவத்திற்கு காரணமானவர் குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இதனிடையே, துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களில் அதிகளவானவர்கள் இளம் வயதினர் என உள்ளூர் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.(நி)

## மஹாராஷ்டிரா
# விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்ட 11 பேர் வெப்பத்தினால் உயிரிழப்பு
## 50 பேர் மருத்துவமனையில் அனுமதி

(டில்லி)
மஹாராஷ்டிரா மாநில அரசின் பூஷண் விருது வழங்கல் விழாவின்போது கடும் வெப்பத்தினால் சுருண்டு வீழ்ந்து 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நவி மும்பை நகரில் திறந்தவெளி மைதானத்தில் இவ்விருது வழங்கும் விழா நடைபெற்றபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர் தத்தாத்ரேயே நாராயணுக்கு இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விருது வழங்கினார்.

இந்த விழாவில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். முற்பகல் 11.30 மணி முதல் பகல் நிகழ்ச்சி 1 மணி வரை இந்நிகழ்ச்சி நடந்தது.

வெப்பநிலை அதிகபட்சமாக 38 பாகை செல்சியஸ் பதிவாகி இருந்தது. இந்நிலையில், கூட்டத்தில் அமர்ந்திருந்தவர்கள் பலர் கடும் வெப்பநிலை தாங்காமல் சுருண்டு விழுந்தனர். இதில், 11 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் வெப்பம் தொடர்பான உடல்நலப் பிரச்சினைகளால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி)

# துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம்
## பீதியில் மக்கள்

(அங்காரா)
துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை அந்நாட்டின் அப்சின் நகரில் இருந்து 23 கிலோ மீற்றர் தொலைவில் தென்மேற்கே நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 4.0 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. 10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

நிலநடுக்கத்தை உணர்ந்ததும் மக்கள் வீடுகளில் இருந்து அவசரமாக வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி உடனடியாக தகவல் வெளியாகவில்லை. ஏற்கனவே நிலநடுக்கத்தால் பெரும் துயரத்துக்கு உள்ளான மக்களுக்கு மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது பீதியை உண்டாக்கி இருக்கிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைநிறுத்தத்தக்க வழிமுறையில் தமிழ் மரபுகளைப் பாதுகாத்தலும் புத்துயிரூட்டலும்



தியாகராசா சாரலன்,
கலாசாரச் சுற்றுலா சிறப்புக்கலை,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நாம் இருபத்தியோராம் நூற்றாண்டில் கால்பதித்துள்ளோம். இந்நூற்றாண்டில் பல சாதனைகளைப் படைத்துவரும் அதே வேளை பல சவால்களையும் சந்தித்து வருகின்றோம். அந்தவகையில் நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் போது உண்மையில் அவை நமது மரபுகளின் வேர்களிலிருந்து விருட்சமாகியவையே என்பது புலனாகும். மரபுகள் என்பதை நோக்கின் அவை நமது முன்னோர்களின் பண்பாட்டுக் களமாகவே காணப்படுகின்றன.

மரபுரிமை என்பது பற்றி வரைவிலக் கணப்படுத்தும்போது "நமது முன்னோர்கள் தலைமுறை தலைமுறையாக பின்பற்றி வந்த பழக்கவழக்கம், வழிபாடு, நம்பிக்கைகள், சடங்குகள், கலை நுட்பங்கள், வைத்திய முறைகள் மற்றும் ஏனைய கலாசார விடயங்களே மரபுரிமை எனப்படும்". புதிய தொழில் நுட்பங்கள் நாளுக்குநாள் தோற்றம் பெற்றாலும் பண்டைய அறிவியலை விட்டு விலகி எவராலும் அவற்றை உருவாக்க முடியாது.

சமூகத்தை ஒற்றுமையுடனும் தேசிய உணர்வுடனும் பயணிக்க உதவும் அறிவாயுதமாகவே மரபுகளைப் பார்க்க முடியும். உலகில் சிறப்பிக்கப்படும் மொழிகளில் தமிழுக்கு முக்கியமான இடமுள்ளது. தமிழ்மொழிக்கும் அதனைப் பேசும் தமிழர்களுக்கும் பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. குறிப்பாக சங்ககாலம் முதல் சமகாலம்வரை பண்பாட்டுப் பிறழ்வுகளை மனதளவில் ஏற்றுக்கொள்ளாத ஒரு இனம் உலகத்திலே இருக்கின்றதென்றால் அது தமிழ் இனம் என்றே உறுதிபடச் சொல்லலாம். இவர்கள் தமது வாழ்க்கையை மரபுகளோடு பின்னிப்பிணைத்து வாழ்ந்து வருகின்றார்கள் என்றே கூறலாம்.



உலக மரபுடைமைகளின் முக்கியத் துவத்தினை கருத்திற்கொண்டு உலக மரபுடைமை சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உலக கலாசார மற்றும் இயற்கை மரபுடைமைகளின் பாதுகாப்பு தொடர்பான சாசனம் ஒரு சர்வதேச உடன்படிக்கையாகும். இதன் மூலம் காலத்தால் அழியாத உலகப் பொக்கிசங்களை பாதுகாப்பதற்கு நாடுகள் ஒன்றிணைந்துள்ளன.

இந்த சாசனத்தில் கைச்சாத்திட்டுள்ள ஒவ்வொரு நாடும் அல்லது ஒவ்வொரு அரச தரப்பும் தமது ஆட்புல எல்லைக்குள் அமைந்துள்ள இயற்கை மற்றும் கலாசார மரபுடைமைகளை அடையாளம் கண்டு, பாதுகாத்து எதிர்கால சந்ததியினரிடம் கையளிப்பதை உறுதி செய்வதற்கான பிரதான பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளன.

தற்போது இந்த உலக மரபுடைமை சாசனத்தில் 190 இற்கும் மேற்பட்ட நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. உலகில் மிக சக்தி வாய்ந்த பாதுகாப்பு சாசனங்களில் ஒன்றாக இது விளங்குகின்றது. தத்தமது மரபுடைமைகளைப் பாதுகாப்பதற்காக நாட்டு மக்கள் மத்தியில் கூட்டுறவை ஊக்குவித்து கலாசார மற்றும் இயற்கைத் தளங்களை பாதுகாப்பதற்கான ஒரேயொரு சர்வதேச சட்ட சாசனமாக இது காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

100 வருடங்களுக்கு மேற்பட்டவை அனைத்தும் மரபுரிமைகள் என வரையறுக்கப்படுகின்றது. குறிப்பாக இவ்வாறான மரபுரிமைகளை இரு வகையாகப் பிரித்து நோக்கமுடியும். இயற்கை மரபுரிமை மற்றும் கலாசார மரபுரிமையாகும். இவற்றுள் இயற்கை மரபுரிமைகளாக ஆறுகள், குளங்கள், மலைகள், குகைகள், பல்வேறுபட்ட நிலவுருவத் தோற்றங்கள் என்றவாறு நோக்க முடியும். கலாசார மரபுரிமைகளாக, தொட்டுணரக் கூடியவை, தொட்டுணர முடியாதவை என்ற அடிப்படையில் பாகுபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் தொட்டுணரக்கூடியவற்றை அசையக்கூடியவை, அசைய முடியாதவை என்றும் வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. ஆகவே மேற்குறிப்பிடப்பட்ட வகைப்பாடுகளின் பின்னணியில் மனித வலுவால் உருவாக்கப் பெற்ற அம்சங்களான கட்டடங்கள், அரண்மனைகள், ஆலயங்கள், சிலைகள், நாணயங்கள், மட்பாண்டங்கள் போன்றவற்றோடு பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், கலைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், விளையாட்டுக்கள், உணவுமுறைகள், வைத்தியம் போன்றனவும் மரபுகளாக நோக்கத்தக்கனவாகும். இவையனைத்தும் நீண்டகால கட்டத்திற்கு முன்பே தமிழர்கள் மத்தியிலே காணப்பட்டதனை சிந்துவெளி நாகரிகம், கீழடி, கொடுமணல், ஆதிச்ச நல்லூர் மற்றும் இலங்கையினுடைய பொம்பரிப்பு, கந்தரோடை, கட்டுக்கரை, யாழ்ப்பாணக்கோட்டை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. பொதுவாகத் தமிழர்களைத் திராவிட இனம் சார்ந்த மக்களாக எடுத்துக் காட்டப்படுவதும் சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமாக அடையாளப்படுத்தப் படுவதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

நீண்ட பாரம்பரியத்தை தமிழர்கள் கொண்டிருந்தாலும் "தமிழர்கள் இல்லாத நாடில்லை தமிழர்களுக்கென்றொரு நாடில்லை" என்ற கருத்தானது தமிழர்களுக்கிருந்த மரபு சிதறடித்த தன்மையை உணர்த்துகின்றது. தமிழ் ஆட்சியாளர்கள் தமது மரபுகளை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடு பல்வேறுபட்ட கலைப்படைப்புக்களை இந்த உலகத்திற்கும் தமிழர்களுக்கும் விட்டுச் சென்றார்கள். உதாரணமாக இந்தியாவிலே தமிழ்நாட்டில் கி.பி 10 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஆலயமாக தஞ்சைப்பெரிய கோயில் காணப்படுகின்றது.

இதன் அமைப்பானது தற்போதைய கட்டடக் கலைஞர்கள் மத்தியில் வியந்து பேசப்படுகின்றது. எகிப்திய பிரமிட்டுக்களுக்கு இணையாக இவ்வாலய அமைப்பு காணப்படுகின்றது. இவ்வாறு எண்ணிலடங்காத தமிழர் மரபுகள் பல இடங்களிலும் பரவிக் காணப்படுகின்றன. விரைவாக ஏற்பட்ட உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற காரணங்களாலும் நவீனத்துவத்தின் தவறான புரிதல்களாலும் நமது மரபுகள் ஒரு விதத்தில் திட்டமிட்டு மறைக்கப்படுவதோடு அவை அழிவின் பாதைக்கு இட்டுச் செல்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

தவறான கொள்கைகள் மற்றும் கருத்தியல்களின் தாக்கமும் இதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதற்கான காரணத்தை கேட்கும் போது உடனே சுற்றுலா வளர்ச்சி என்றே அதிகமானவர்கள் கூறுவார்கள். ஆனால் ஒரு விதத்தில் நமது நடையுடை பாவனையை சுற்றுலாவின் வருகை மாற்றுவதாக அமைந்தாலும் மறைமுகமாக நமது மரபுரிமைகளை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டுவதாகவே அமைகின்றது. ஒரு விதத்தில் சுற்றுலாவானது நமது மரபுகளைப் பாதுகாக்கின்றது. மேலும் நமது மரபுரிமைகள் மண்ணில் புதையுண்டும் காடடர்ந்தும் வேறு கலாசாரங்களால் கலப்புண்டும் காணப்படுவதை நிஜத்தில் காண்கின்றோம்.

இதற்கு காரணங்கள் பலவுண்டு. அவற்றில் குறிப்பிடத்தக்கவனவாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- மரபு மரபு என்று குரல்கொடுத்து என்ன பயன் என்ற நிலைப்பாடு
- நேரவிரயம் என எண்ணுவது
- மக்களிடம் இது பற்றிய விழிப்புணர்வின்மை
- இனரீதியான அடக்குமுறைகள் (யார் முதலில் நாகரிகம் பெற்றதென்ற எண்ணப்பாடு)
- அரசாங்கங்களின் பக்கச்சார்பு
- வியாபார நோக்கம்
- நிலம் பறிபோய்விடும் என்ற சிந்தனை
- பாதுகாக்க முன்வராமை
- ஆய்வு மேற்கொள்வதிலுள்ள இடையூறுகள்
- பாடத்திட்டங்களில் பக்கச்சார்பான கருத்துக்கள்
- துறைசார் வல்லுநர்களின் பற்றாக்குறை
- தேவையான நிதியுதவியின்மை
- தத்தமது மரபுகளை அறியும் ஆர்வமின்மையும் அவற்றின் முக்கியத்துவத்தை உணராமையும்

மேற்கூறிய காரணங்கள் மரபுரிமைகளைப் பாதுகாப்பதில் தளர்வினை ஏற்படுத்தியிருந்தாலும் அவற்றை குறிப்பிடத்தக்களவில் பாதுகாப்பதற்கு தற்காலத்தில் சில முயற்சிகள் உலகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மேற்குலக நாடுகள் இன்று தமது மரபுரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியிலும் பிற மரபுகளை கண்டறிந்து ஆய்வு ரீதியிலே அவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையிலும் பயணங்களில் ஈடுபட்டு வருவதைக் காணலாம்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற உலகம் தழுவிய நல்லுறவு நற்சிந்தனையை விதைத்தது தமிழர்களே. ஆனால் இன்று தமிழர்களுடைய மரபுகள் தமிழர்களினாலேயே கைவிடப்பட்டு வருவதைக் காண்கிறோம். ஆயினும் தமிழர்களுடைய பண்பாடுகளை, மரபுகளை பார்க்கின்ற வெளிநாட்டவர்கள், உள்நாட்டைச் சேர்ந்த பிற இனத்தவர்கள், அம்மக்கள் பின்பற்றுகின்ற வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த யதார்த்தங்களை உற்று நோக்கி தாமும் பின்பற்றிப் பார்க்கின்ற தன்மை தமிழர்களின் மரபுக்கு கிடைத்த வெற்றியாகும். குறிப்பாக எம்மவர்கள், ஒரு குழந்தையானது தாயின் கருவறையிலிருந்து பிறந்து கல்லறை செல்லும் வரையுள்ள அனைத்திலும் ஆரோக்கியமானவற்றை கடைப்பிடிக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. அதிலும் இயற்கையோடிணைந்த அளவற்ற பொக்கிசங்களை தமிழர் தம் வாழ்வியலில் கொண்டிருப்பது வியப்பைத் தருகின்றது.

தமிழர்களுடைய மரபுகளை அழிவிலிருந்து மீட்டு நமது எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க வேண்டிய கடப்பாடு தமிழர் என்ற ரீதியிலே அனைவருக்கும் இருக்கின்றது. இதற்கான முன்னாயத்த செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

- "எங்கள் மரபுரிமை எங்கள் பிள்ளைகளுக்கே" என்ற கருத்திட்டங்களை கொண்டு வர வேண்டும்.
- நமது மரபுரிமைகள் பற்றிய விடயங்களை தொலைக்காட்சி ஊடாகவும் வானொலி ஊடாகவும் கருத்தாடல்கள் மேற்கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- விளம்பரப்படுத்தல்களை பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ள வேண்டும்.
- மரபுரிமைகளை பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குதல்.
- பத்திரிகைகளில் மரபுகளிற்கென தனி பக்கங்களை ஒதுக்கி அது தொடர்பான கட்டுரைகளை எழுத முன்னுரிமை அளித்தல்.
- சஞ்சிகைகளில் மரபுரிமை சார்ந்தவற்றை வெளியிடுதல்
- புதிய ஊடகங்கள் ஊடாக மரபுகள் சார்ந்தவற்றை வெளியிடுதல்
- மரபுகளை கண்டறிவதில் தயக்கம் காட்டுவதை தவிர்த்தல்
- பாடசாலை மட்டங்களில் மரபுகள் சார்ந்த கல்விச் சுற்றுலா நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தல்
- மாணவர்களிடம் மரபுகள் தொடர்பான நிகழ்ச்சிகளை வழங்க வைத்தல், போட்டிகளை நடத்திப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்.
- மரபுகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு இலவசப் பயிற்சி வழங்குதல்.
- சிறந்த மரபுகளை தபால் தலைகளாக வெளியிடல்.
- முக்கியமானவற்றை நினைவுச் சின்னங்களாக அமைக்கும்போது அவை பிற்காலத்தில் மரபுகளாக மாற்றப்படலாம்.
- மொழி ரீதியாக அவற்றை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- மரபுகளை ஆவணப்படுத்லை பாடசாலைகள், கலாசார அமைப்புகள், பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் பிரிவுகள் போன்றனவற்றினூடாக மேற்கொண்டு அவற்றை எல்லோரும் அறியும் வகையில் செயற்படுதல்.

போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி நமது மரபுகளைப் பாதுகாப்பதற்கு அனைத்து தரப்பினரும் பங்களிப்புச் செய்வது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். தற்போதைய சூழ்நிலையில் நமது மரபுகளை அழிவடையாமல் பாதுகாத்துக் கொள்ள சிறந்த வழியாக ஊடகங்கள் காணப்படுகின்றன. அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், நவீன ஊடகம் என்ற மூன்று வகையான ஊடகங்கள் புழக்கத்தில் உள்ளன. மனிதனுடைய தொடர்பாடல் செயன்முறைகளை விரிவுபடுத்த உதவுவது இந்த ஊடகங்களேயாகும். இவற்றிலும் நவீன ஊடகங்களின் எண்ணிமத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால் தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்து கொள்கின்ற தன்மை காணப்படுகின்றன. இன்று உலகம் சுருங்கி கிராமமாக மாறுவதற்கு கையடக்கத் தொலைபேசிகளின் பெருக்கம் மிக முக்கிய காரணமாகும்.

குறிப்பாக, முகப் புத்தகம், வலையொளி, வலைப் பூக்கள் போன்றவற்றினூடாக உலகின் எந்த மூலையிலும் இடம்பெறும் செய்திகள் பரப்பப்படும். ஆகவே நமது மரபுகளை உள்ளடக்கிய காட்சிகளை இவற்றில் பதிவிடும்போது அனைவரும் பார்வையிடக்கூடிய வசதி காணப்படும். குறிப்பாக ஆவணக் காட்சிப் படங்களை அந்தந்த இடங்களுக்கே சென்று நேர் காணலூடாக வெளியிடும் போது அதன் உண்மைத் தன்மை வெளிப்படும். பல்வேறுபட்ட இணையத்தளங்கள் இவ்வாறான பணிகளை முன்னெடுத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"மரபிழந்தவன் மரணித்தவன்" என்ற கோட்பாட்டிற்கிணங்க தமிழ் மக்களாகிய நாம் நமது மரபுகளை பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு ஒப்படைப்போமானால் மரபு வழியானது பாதுகாக்கப்படும். இதனை கருத்தில் கொண்டுதான் நமது மரபுகளை அழிவடைய விடாமல் பாதுகாக்க நினைவுச்சின்னங்கள், மற்றும் இடங்களுக்கான பன்னாட்டு அமைப்பானது (ICOMOS) ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 18 ஆம் திகதியை உலகமரபு நாளாக (World Heritage Day) பிரகடனப்படுத்தி கொண்டாடி வருகின்றது. இந்நாளில் நாம் நமது மரபுரிமைகளைப் பேண உறுதியெடுத்துக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் ரயர்களை எரியூட்டிய விசமிகள்



(கருமபுரம்)


கிளிநொச்சி ஏ 35 பிரதான வீதியில் கடந்த புதுவருட தினத்தன்று இனந்தெரியாத விசமிகளால் ரயர்கள் எரியூட்டப்பட்டுள்ளன. எரியூட்டப்பட்ட ரயர்களை மூன்று நாட்களாகியும் எவரும் அகற்ற முன்வரவில்லை. வீதியில் ரயர்கள் எரியூட்டப்பட்டுள்ளதால் அது போக்கு வரத்துக்கு மிகவும் பாதிப்பாக இருப்பதாகவும் உரிய தரப்பினர் இதனை அகற்ற முன் வர வேண்டும் எனவும் அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-316)

# மாங்குளம் கோணக்குளம் பகுதியில் உயிருக்கு போராடும் யானை

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் மணவாளன்பட்ட முறிப்பு கோணக்குளம் பகுதியில் யானை ஒன்று உயிருக்கு போராடும் நிலையில் காணப்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக குறித்த யானை அப்பகுதிகளில் நடமாடி வருவதாகவும், யானையின் கால் பகுதியில் காயங்கள் இருப்பதற்கான தடயங்கள் இருப்பதாகவும், அந்த பகுதியின் குளக்கரை நீர் பகுதியில் குறித்த யானை படுத்திருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.



சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு பல தடவைகள் அறிவித்தல் கொடுத்தும் அவர்கள் வரவில்லை என்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையினை பாதுகாக்க தவறி நிற்பதாகவும் தெரிவித்துள்ளனர். (4-6)

# வவுனியாவில் வீடொன்றின் மீது முறிந்து வீழ்ந்த தென்னைமரம்

(வவுனியா)

வவுனியாவில் வீடொன்றின் மீது வீழ்ந்த தென்னை மரத்தால் குறித்த வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் பெய்த கன மழையின் காரணமாக வீட்டின் மேல் கூரையில் தென்னை மரம் வீழ்ந்துள்ளது. எனினும் வீட்டில் இருந்தவர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. (4-6)

# கால்நடைகளின் உறைவிடமாக முல்லை. நகர் பேருந்து நிலையம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு நகரத்துக்கான பேருந்து நிலையம் கடந்து 2020 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட போதும் இதுவரை பயன்படுத்தப்படாத நிலையில் கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுகிறது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு நகரத்துக்கான புதிய பேருந்து நிலையமானது நகர விருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பேருந்து நிலையமானது அதன் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவுறுத்தப்படாத நிலையில் ஆரம்ப கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08 ஆம் திகதி பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாக பயன்படுத்தபடாத நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் தற்போது கால்நடைகளின் உறைவிடமாகவும் காணப்படுகின்றது. குறித்த பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகள் கொண்ட கடைத்தொகுதிகளும் இதுவரை திறந்து வைக்கப்படாமலும் காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளனர். (4-6-315)

# 404 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் முகத்தான்குளம் கால்வாய் புனரமைப்பு



(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம், முகத்தான்குளம் கால்வாய் புனரமைப்பு நடவடிக்கைக்கு 404 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செட்டிகுளம், முகத்தான்குளம் பகுதிக்கு சென்று அங்குள்ள விவசாயிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா, செட்டிகுளம், முகத்தான்குளத்தின் வயல் நிலங்களுக்கு சீரான தண்ணீர் வரத்து இல்லாமையினால் பல ஏக்கர் காணிகள் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றன. அண்மையில் வவுனியாவில் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பின் போது கேட்டுக் கொண்டதற்கிணங்க முகத்தான்குளம் கால்வாய் அமைப்பதற்கு 404 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8 கிலோமீற்றர் தூரத்திற்கு அமைக்கப்படவுள்ள இக்கால்வாய் காரணமாக 950 ஏக்கர் நிலம் சிறுபோக நெற்செய்கைக்கு பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் 10 குளங்கள் புனரமைப்பதற்கும் அனுமதி பெற்றுக் கொண்டுள்ளோம். அதற்கான நிதியும் விரைவில் கிடைக்கப்பெறும் எனத் தெரிவித்தார். (4-6-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 350 |
| தக்காளி | 200 | 150 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 150 | 150 | 120 | 250 |
| கரட் | 160 | 320 | 200 | 350 |
| பூசணி | 50 | 70 | 60 | 40 |
| புடோல் | 140 | 140 | 160 | 160 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 120 | 130 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 200 | 200 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 340 | 300 | 400 |
| பீற்றூட் | 120 | 200 | 160 | 200 |
| கறிமிளகாய் | 200 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 700 | 1000 |
| போஞ்சி | 250 | 300 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 320 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 80 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 120 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 350 | 280 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 450 |
| முள்ளங்கி | 50 | 100 | -- | 240 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- | -- |

## பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாதவர்களுக்கு

# பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

## கிளிநொச்சி அரச அதிபர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் இல்லாதவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் போது தவறவிடப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் சட்ட ஆவணங்களை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் அரச திணைக்களங்களுடன் இணைந்து பல்வேறு நடமாடும் சேவைகளை மேற்கொண்டு ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

ஆனாலும் தற்போது மாவட்டத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் இல்லாமலும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளனர்.

இதேவேளை சிறுவர் இல்லங்களில் உள்ள குறிப்பிட்ட சில சிறுவர்களுக்கும் இவ்வாறு பிறப்புச் சான்றிதழ் இல்லாத நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேச செயலாளர்கள் ஊடாகவும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் துறை சார்ந்த பாடசாலை அதிபர்கள் ஊடாகவும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாதவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அந்த விபரங்களின் படி பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024



விடாமுயற்சியால் வெற்றியை வரவழைத்துக் கொள்ளும் கடக இராசி வாசகர்களே!

தேசப்பற்றும் செயலில் சுறுசுறுப்பும் கொண்டிருக்கும் உங்களுக்கு இந்த சோபகிருது ஆண்டின் தொடக்கம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தோடு தொடங்குகின்றது. "அகப்பட்டவனுக்கு அஷ்டமத்துச் சனி" என்பது பழமொழி. ஆனால் உங்களை பொறுத்தவரை அஷ்டமாதிபதியாகச் சனி விளங்குவதால், தன் வீட்டில் சஞ்சரிக்கும் சனி பெரியளவில் பாதிப்புகளை ஏற்படுத்த மாட்டார். வந்த துயரம் வாயிலோடு நின்றுவிட வேண்டுமானால் காக வாகனத்தானைக் கைகூப்பித் தொழ வேண்டியது அவசியமாகும். ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் உங்கள் இராசியைப் பார்க்கின்றார். சனி

போகின்றார்கள். இந்த அரவு கிரகங்களின் மாற்றம் உங்களுக்கு நன்மையை வழங்கும். என்றாலும் பெயர்ச்சியாகும் சமயத்தில் உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது. இராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக சகோதர உறவில் விரிசல்கள் ஏற்படும். இக்காலத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருந்தால் கவலை இல்லை. அல்லாதவர்கள் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைக் கேட்டுக் கொள்வது நல்லது. ஆலய வழிபாடும் நன்மை தரும்.

### குருப்பெயர்ச்சி!

சித்திரை 09 ஆம் திகதி (22.04.2023) மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். உங்கள் ராசிக்கு 6, 9 இற்கு அதிபதியானவர் குரு. அவரது பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிந்து புனிதப்படுகின்றது. பொதுவாக 10 இல் சஞ்சரிக்கும் குருவால் பதவி மாற்றம், இடமாற்றம் உருவாகும். அதுமட்டுமல்ல உத்தியோகத்தில் உள்ளவர்கள் "உழைப்பிற்கேற்ற பலன் இல்லையே" என்று புதிய வேலைக்கு முயற்சி செய்வர். இலாகா மாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வரலாம். குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்வதால் சில பிரச்சினைகள் ஏற்படும். குருவின் பார்வை பலத்தால் தாயின் உடல்நலம் சீராகும். நீண்ட நாட்களாகப் பேசிப்

மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதன் மூலம் தடை ஏற்படும். பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரம் பெறுகிறார். 24.08.2023 முதல் மகரத்திற்கு வந்தும் வக்கிரம் பெறுகிறார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்கு முறையாகப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். இந்த வக்கிர காலம் உங்களுக்கு பொற்காலமாக அமை




யும். கண்டகச்சனியும் அஷ்டமத்துச் சனியும் வக்கிரம் பெறும் பொழுது நன்மைகளே நடைபெறும். இதுவரை முயற்சித்தும் முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். சப்த மாதிபதியாகவும் சனி விளங்குவதால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். புதியவர்களை நம்பிப் பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் ஊதிய உயர்வின் காரணமாக கணவன்

### வளர்ச்சி தரும் வழிபாடு!

புத்தாண்டில் இன்பங்கள் இல்லம் தேடி வர சண்முக கவசம் பாடி சண்முக நாதப் பெருமானை செவ்வாய்க் கிழமை தோறும் வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்!

இந்தப் புத்தாண்டில் ஆரோக்கியக் குறைபாடுகள் அதிகரிக்கும். செலவுகள் கூடும். குடும்ப விவகாரங்களில் மூன்றாம் நபரின் தலையீட்டைத் தவிர்ப்பது நல்லது. மனஅழுத்தம் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்பட நிதானமும் அமைதியும் தேவை. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு அடிக்கடி விடுமுறை எடுத்ததன் விளைவாக பிரச்சினைகள் ஏற்படலாம். பொருளாதார நிலை திருப்தியாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகள் திருப்தி தரும்.

### குரு-சனியின் வக்கிரம்!

## கடன்சுமை குறைய புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

பகவான் அஷ்டமத்தில் சொந்த வீட்டிலேயே சஞ்சரிக்கின்றார். இடையில் கும்பத்தில் வக்கிரம் பெறுவதோடு 24.08.2023 இல் மீண்டும் மகரத்திற்கு வந்து கண்டகச் சனியாகப் பலம் பெறுகின்றார். அஷ்டமத்துச் சனி நடைபெற்றாலும் கண்டகச் சனி நடைபெற்றாலும் மிகுந்த கவனத்தோடு தான் செயற்பட வேண்டும். பிறருக்கு நன்மை செய்தால் கூட அது தீமையாகத்தான் தெரியும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். அமைதி கிடைக்க வேண்டுமானால் அருகில் இருப்பவர்களை அனுசரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் செவ்வாயின் பார்வை இந்த ஆண்டு மூன்று முறை சனியைப் பார்க்கும் விதத்தில் வருகின்றது. அந்தந்த காலங்களில் எல்லாம் அவசரப்பட்டு வாக்கு கொடுப்பதன் மூலம் பிரச்சினைகள் உருவாகும். அதிகார வர்க்கத்தினரின் பகையை வளர்த்துக் கொள்ள நேரிடும். ஆரோக்கியமும் அடிக்கடி தொல்லை கொடுக்கும். வெளிநாட்டில் உள்ளவர்கள் சொந்த ஊர் திரும்ப முடியாத சூழ்நிலை அல்லது அங்கேயே வேலை கிடைக்காத நிலை ஏற்படலாம். 22.04.2023 இல் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு குரு பகவான் வருகின்றார். இது தொழில் மாற்றம் தரும் இடம் என்பதால் மாற்றங்கள் வரலாம். 08.10.2023 இல் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் கேதுவும் 9 ஆம் இடத்தில் இராகுவும் சஞ்சரிக்கப்

பேசி விட்டுப் போன இடத்தை வாங்கி வீடு கட்ட நினைப்பீர்கள். ஆன்மிகப் பயணங்கள் அதிகரிக்கும். புதிதாக வாகனங்கள் வாங்க வேண்டுமென்ற கனவை நனவாக்கக் கூடிய நேரமிது. உத்தியோகத்தில் "எவ்வளவுதான் உழைத்தாலும் அதற்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லையே" என்று கவலைப்பட்டவர்கள் மற்ற நிறுவனங்களில் சேர எடுத்த முயற்சி வெற்றி பெறும். வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து அழைப்புகள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. வழக்குகள் சாதகமாக முடியும். கடன்சுமை குறைய புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள்.

### கும்பச் சனி!

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு அஷ்டமத்தில் சனி பகவான் வீற்றிருக்கின்றார். அவருக்கு கும்ப ராசி சொந்த வீடு என்பதால் கூடுதல் பலத்துடன் சஞ்சரிக்கின்றார். எனவே விரயத்திற்கு மேல் விரயங்கள் வந்து கொண்டேயிருக்கும். வீடு மாற்றங்களும் நாடு மாற்றங்களும் தவிர்க்க முடியாததாக அமையும். வீண்பழிகளைச் சந்திக்க நேரிடும். உங்கள் முன்னேற்றத்தை

ஓரிடத்திலும் மனைவி ஓரிடத்திலும் பணிபுரியும் சூழ்நிலை உருவாகலாம்.

### ராகு-கேது பெயர்ச்சி!

08.10.2023 அன்று மீன இராசியில் இராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார். 9 ஆம் இடத்தில் இராகு பகவான் சஞ்சரிக்கப் போவதால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியளிக்கும். பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து பணிபுரிய அழைப்புகள் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள இயலாது. சகாய ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அடிக்கடி குறைபாடுகள் வந்து சேரும். தொழிலில் புதியவர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கலாம். பழைய வழக்குகள் முடிவடைந்த நேரத்தில் புதிய வழக்குகள் தோன்றலாம். வெற்றியைப் போராடிப் பெற வேண்டிய நேரமிது.

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. 6 இற்கு அதிபதி வக்கிரம் பெறுவது நன்மை தான். நோய் நொடிகள் அகலும். பகைவர்கள் மனம் மாறிப் பாசம் காட்டுவர். அதேநேரம் 9 இற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் தந்தை வழி ஆதரவு திருப்தி தரும். முன்னோர்கள் கட்டி வைத்த சிதிலமடைந்த ஆலயங்களை மீண்டும் புதுப்பிப்பீர்கள். 27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப இராசியில் சனி வக்கிரம் பெறுகின்றார். பிறகு 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்தில் வக்கிரம் பெறுகின்றார். 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்கிரம் பெறுவதால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படலாம். கூட்டாளிகளை மாற்றம் செய்வது பற்றிச் சிந்திப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் விவாதங்கள் வந்து போகும். விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். அதேநேரம் அஷ்டமாதிபதியாகவும் சனி விளங்குவதால் திருமண முயற்சி கைகூடுவது போல் இருந்து கைநழுவிச் செல்லலாம். தொழில் வெற்றிகரமாக நடந்தாலும் இலாபம் கைக்கு வருவது அரிது. உத்தியோகத்தில் மனசாட்சிக்கு விரோதமாக எந்தக் காரியமும் செய்ய வேண்டாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 155





"பெண்ணே! நினைவில் வைத்திருக்க வேண்டிய சில சம்பவங்களை நீ மறந்து விட்டாய் போலிருக்கிறது. அவற்றை உனக்கு ஞாபகப் படுத்துகிறேன்" என்றான் ரவிதாசன்.

"பழைய கதை இப்போது எதற்கு?" என்றாள் நந்தினி. "இப்போது எதற்கு என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், முதலில் ஞாபகப்படுத்தி விட்டுப் பிற்பாடு சொல்கிறேன்" என்றான் ரவிதாசன்.

அவனைத் தடுப்பதில் பயனில்லையென்று கருதியவளைப் போல் நந்தினி ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"ராணி! கேள்! மூன்று வருடத்துக்கு முன்னால் ஒரு நாள் நடுநிசியில் வைகை நதிக் கரையில் உள்ள மயானத்தில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது. சாஸ்திரப்படி புரோகிதர்களைக் கொண்டு அந்திமக்கிரியை ஒன்றும் அங்கு நடக்கவில்லை. காட்டில் காய்ந்து கிடந்த கட்டைகளையும் குச்சிகளையும் இலைச் சருகுகளையும் கொண்டு வந்து அச்சிதையை அடுக்கினார்கள்.

மரத்துக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த ஓர் உடலைக் கொண்டு வந்து அந்தச் சிதையில் இட்டார்கள். பிறகு தீ மூட்டினார்கள். காட்டுக் கட்டைகளில் தீ நன்றாய்ப் பிடித்துக் கொழுந்து விட்டு எரிந்தது. அப்போது காட்டு நிழலிலிருந்து உன்னைச் சிலர் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார்கள். உன் காலையும் கையையும் கட்டிப் போட்டிருந்தது. உன் வாயில் துணி அடைத்திருந்தது. இன்று அழகாகப் பூ வைத்துக் கொண்டை போட்டு கொண்டிருக்கிறாயே, அந்தக் கூந்தல் விரிந்து தரையில் புரண்டு கொண்டிருந்தது.

உன்னை அம்மனிதர்கள் ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த சிதையில் உயிரோடு போட்டுக் கொளுத்தி விட எண்ணியிருந்தார்கள். 'இன்னும் கொஞ்சம் தீ நன்றாக எரியட்டும்!' என்று அவர்களில் ஒருவன் சொன்னான். உன்னை அங்கேயே போட்டு விட்டு அந்த மனிதர்கள் தனித்தனியே ஒரு பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

அதை நீ கேட்டுக் கொண்டிருந்தாய். உன் வாயை அடைத்திருந்தார்களே. தவிர, கண்ணையும் கட்டவில்லை. காதையும் அடைக்கவில்லை. ஆகையால், பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தாய். அவர்கள் அனைவரும் சபதம் கூறி முடிந்த பிறகு உன்னை நெருங்கினார்கள். அது வரை சும்மா இருந்தவள், கட்டுண்டிருந்த உன் கைகளால் ஏதோ சமிக்ஞை செய்ய முயன்றாய். உன் கண்களை உருட்டி விழித்துப் புருவத்தை நெரித்துக் கஷ்டப்பட்டாய்.

அவர்களில் ஒருவன் 'இவள் ஏதோ சொல்ல விரும்புகிறாளடா!' என்றான். 'பழைய கதையாகத்தான் இருக்கும் தூக்கிச் சிதையில் போடு!' என்றான் இன்னொருவன். 'இல்லையடா! தீயில் போடுவதற்கு முன்னால் என்னதான் சொல்கிறாள், கேட்டு விடலாம்! வாயிலிருந்து துணியை எடு!' என்றான் மற்றொருவன்.


அவனே அவர்களுக்குத் தலைவன் ஆனபடியால் உன் வாயிலிருந்து துணியை எடுத்தார்கள். நீ அப்போது என்ன சொன்னாய் என்பது நினைவிருக்கிறதா, பெண்ணே!" என்று ரவிதாசன் கேட்டு விட்டு நிறுத்தினான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நாட்டுப்பற்று



(நேற்றைய தொடர்ச்சி...)

கணவனின் வார்த்தையை மீறாத அவன் மனைவியும் கண்ணீரோடு அதற்குச் சம்மதித்தாள். மறுநாள் குழந்தையை எடுத்துக் கொண்டு ஆற்றுக்கு வந்தாள். நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டு எந்த விதச் சலனமும் இல்லாமல் வைகை ஓடிக்கொண்டிருந்தது.

ரத்னா ஆற்றில் இறங்கி, கண்ணீரோடு கடைசியாய்த் தன் மகனை முத்தமிட்டாள். ஒரு மூங்கில் தட்டில் குழந்தையைக் கிடத்தி, ஆற்றில் விட்டாள். பிறகு கதறி அழுதவாறே வீட்டுக்குச் சென்றாள்.

இச் செய்தி அரசனுக்கும் அரசிக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வேலப்பனையும் ரத்னாவையும் அழைத்து, கண்களில் நீர் மல்க நன்றி தெரிவித்தனர். அவர்கள் இருவரையும் புகழ்ந்து, "வேலப்பா, நீங்கள் இருவரும் செய்திருக்கும் தியாகத்துக்கு இந்த நாட்டையே பரிசாக உங்களுக்குக் கொடுத்தாலும் ஈடு செய்ய முடியாது. ஆயினும் நான் அறிவித்தபடி இந்த நாட்டில் பாதியை உங்களுக்குப் பரிசாகத் தருகிறேன்" என்றார் அரசர்.

வேலப்பன் மன்னரை வணங்கி, "பிரபு! தாங்கள் அளிக்கும் பரிசுக்காக நாங்கள் இதைச் செய்யவில்லை. தங்கள் மீதுள்ள அன்பினாலும் இந்த நாட்டின் மீது நாங்கள் வைத்திருக்கும் பாசத்துக்காகவும்தான் நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்தோம்" என்று கூறி, அரசன் அறிவித்த பரிசை ஏற்க மறுத்து விட்டான்.

மன்னர் மிகவும் வற்புறுத்தியும் அவர்களிருவரும் பரிசை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. நாடே அவர்களின் தியாகத்தைப் போற்றிப் புகழ்ந்தது.

சில நாட்களில் அரசி தாய்மைப்பேறு அடைந்தார். மன்னரும் மக்களும் மிகவும் மகிழ்ந்தனர். மாதங்கள் உருண்டோடின. அரசிக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. செய்தியறிந்து நாடே திருவிழாக் கோலம் பூண்டது.

வேலப்பனும் ரத்னாவும் தங்கள் துக்கத்தை மறந்து, இந்த மகிழ்ச்சியில் பங்கு கொண்டனர். அன்றிரவு ரத்னாவுக்குத் தன் குழந்தை ஞாபகம் வந்தது.

வைகைக் கரைக்குச் சென்றாள். குழந்தையைத் தான் விட்ட இடத்துக்குச் சென்று நின்றுகொண்டு, மகன் நினைவில் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது.. திடீரென ஒருவர் ரத்னாவின் முன்னே குழந்தையோடு நிற்பது போலிருந்தது. கண்களைத் துடைத்து விட்டு, ரத்னா உற்றுப்பார்த்தாள். மன்னருக்கு ஆசி வழங்கிய அதே முனிவர்தான். கையில் குழந்தையோடு நின்று கொண்டிருந்தார். அந்தக் குழந்தை, ரத்னாவின் குழந்தையேதான்.

ரத்னா வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் முனிவரைப்பார்த்தாள். குழந்தையை ரத்னாவிடம் கொடுத்த முனிவர், அவளைப் பார்த்து, "நீ குழந்தையை ஆற்றில் விட்டவுடன் நான்தான் எடுத்து வளர்த்து வருகிறேன். நீயும் உன் கணவனும் செய்த இந்த மாபெரும் தியாகத்தைப் பாராட்டுகிறேன். உங்கள் இருவருடைய நாட்டுப்பற்றை இந்த உலகம் உணரவே இதுபோல் செய்தேன். எதிர்காலத்தில் உன் மகன், இளவரசனுக்குத் துணையாக நின்று இந்த நாட்டைக் காப்பான்" என்று கூறி, ஆசி வழங்கினார்.

குழந்தையுடன் ரத்னா வீட்டுக்கு ஓடோடி வந்த மறு நிமிடம், இச் செய்தி காட்டுத்தீ போல் பரவியது. அரசனும் அரசியும் ரத்னாவுக்கு மீண்டும் குழந்தை கிடைத்ததை அறிந்து மிகவும் மகிழ்ந்தனர். அக்குடும்பத்தை அழைத்து, அரசவையில் உரிய மரியாதை தந்து கௌரவித்தனர். அவர்களின் நாட்டுப்பற்றை நாடே கௌரவித்தது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமே என் தேசம்,
நன்மை செய்வதே என் சமயம்.
~ தோமஸ் பெய்னின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அங்கு அகழ்ந்து சிலை எடுக்க இங்கு வைத்த சிலையை எடு என்றால்...

இவ்வுலகில் இந்து சமயமே ஆதிச் சமயம் என்பதற்கு மாற்றுக்கருத்திருக்க முடியாது.

சிந்து வெளி நாகரிகம் தொடக்கம் தமிழகத்து கீழடி ஆய்வுவரை இந்து சமயம் காலத்தால் முந்தியது என்ற உண்மை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்து சமய வழிபாட்டு முறைமைகள் ஆழமான மருத்துவ அடிப்படைகளை உள்ளடக்கியவை என்ற உண்மையை மேலைநாட்டவர்கள் உறுதி செய்துள்ளனர்.

ஆம், பிள்ளையார் வழிபாட்டின்போது நெற்றியில் குட்டிக் கும்பிடுவது, தோப்புக் கரணம் போடுவது, பத்மாசனமாக அமருவது, மரணச் சடங்குகளுக்குச் சென்றால் நீராடிய பின்பே வீட்டுக்குள் போவது, விரதம் அனுஷ்டிப்பது என அனைத்தும் உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான வழிமுறைகள் என்பதை உலக மருத்துவ விஞ்ஞானம் உறுதி செய்துள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், நேற்றைய தினம் தமிழகத்தில் ஞானசம்பந்த குழந்தை ஞானப்பால் உண்ட சீர்காழி சட்டநாதர் திருக்கோவிலில் நடந்த அகழ்வொன்றில் 22 ஐம்பொன் சிலைகள், 55 பீடங்கள், 400க்கும் மேற்பட்ட செப்பேடுகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடாகியிருந்த வேளையில், ஆலயத்தின் மேற்திசையில் மண்ணகழ்வு செய்யப்பட்டபோது மேற்குறித்த சிலைகளும் பீடங்களும் ஏடுகளும் கண்டுடெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட சிலைகள், பீடங்கள் செப்பேடுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டவை என வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்.

சீர்காழியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட வரலாற்றுப் பொக்கிசங்கள் தமிழகம் முழுவதிலும் பேசுபடு பொருளாகியுள்ளது.

ஆம், குறித்த இடத்தில் மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதான கருத்துக்கள் முன்னெழுந்துள்ள அதே நேரம், அகழ்வில் கிடைத்த அருங்கலைப் பொக்கிசங்களைப் பார்வையிட மக்கள் கூட்டம் முண்டியடிக்கிறது.

இஃது தமிழகத்தில் இடம்பெற, இங்கு நம் யாழ்ப்பாணத்துப் பண்ணைச் சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுவதற்கு பொலிஸார் அதி தீவிரம் காட்டி வருகின்றனர்.

ஆம், யாருக்கும் இடைஞ்சல் இல்லாத - எந்த வழிபாட்டுத் தலங்களின் நிலங்களையும் கபளீகரம் செய்யாமல் - எந்த வழிபாட்டுத் தலங்களுக்கும் இடையூறு இல்லாமல், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்த தீவகத்தின் நுழைவாயிலாகவுள்ள பண்ணைக் கடலோரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்மன் சிலையை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்பதில் பொலிஸார் காட்டுகின்ற அவசரத்தைப் பார்க்கும்போது அதற்குப் பின்னால் மிகப்பெரிய அழுத்தங்கள் உள்ளன என்பதைப் புரிய முடிகிறது.

என்ன செய்வது அங்கு (தமிழகத்தில்) நிலம் அகழ்ந்து சிலை எடுக்க, இங்கு வைத்த சிலையை எடு என்றால் என்னதான் செய்வது.

# மாகாண சபை சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் தேர்தலை உடனடியாக நடத்த முடியும்

## எம்.ஏ.சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(குடத்தனை)

மாகாண சபை சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மாகாண சபை தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்புவற்றை உடனடியாக நடத்த முடியும் எனவும் அவற்றை ஒரே நாளிலே நடத்த முடியும் எனவும் அதனால் செலவினத்தை குறைத்துக் கொள்ளலாம் என தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை அவர் தனது குடத்தனையில் உள்ள இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்துவதற்கு உதவியாக நான் முன்னர் இரண்டு தடவைகள் சமர்ப்பித்ததைப் போல இந்த தடவையும் பாராளுமன்றத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஓர் தனிநபர் சட்டமூலம் ஒன்றை சம்ர்ப்பித்திருக்கிறேன்.

அதாவது பழைய முறையில் மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடத்துவதற்கான ஓர் இலகுவான சட்ட திருத்தம் ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கிறது. நேற்று பாராளுமன்றத்தில் இருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்திருக்கிறது. நான் கொடுத்த சட்ட திருத்தம் வர்த்தமானியிலே பிரசுரிக்கப்பட்டு விட்டதாகவும் நான் விரும்பின தினத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார்கள்.

25ஆம் திகதி காலையிலேயே அந்தச் சட்ட மூலத்தை நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றேன். அது சமர்ப்பிக்கின்றபோது அதைத்தான் முதலாவது வாசிப்பு என்று சொல்வார்கள். பாராளுமன்றம் அதனை ஏற்றுக் கொண்டால் அதற்குப் பிறகு மூன்று வாரங்களுக்குள்ளே, இரண்டு வாரங்களுக்கு பிறகு அதனை சட்டமாக இயற்ற முடியும். ஆகையினாலே பாராளுமன்றம் இந்த விடயத்திலே தீர்க்கமாக செயற்பட வேண்டும். பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருக்கின்ற மாகாண சபை தேர்தல்களை நடத்துவதிலே உள்ள சட்ட சிக்கலை நீக்குவதற்கான ஒரு சட்டத் திருத்தம் ஓர் தனிநபர் சட்டமூலமாக நான் கொண்டு வந்திருக்கின்றேன்.

இதை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்திலே அரசாங்கமும், மற்றைய கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மாகாண சபை தேர்தல்களையும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை பிற்போடப்படுவதற்கான காரணத்தாலே இரண்டையும் ஒரே நாளிலேயே நடத்தலாம். அப்படி நடத்துவதானால் இதனால் வருகிற செலவை மிக மிக குறைவானதாக ஆக்கலாம்.

அரைவாசியாக கூட ஆக்கலாம். ஆகையினாலே இதனையும் நிறைவேற்றி இப்போது காலங் கடந்து கொண்டிருக்கின்ற இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மாகாண சபை தேர்தல்களையும் உடனடியாக இரண்டு தேர்தல்களையும் ஒரே நாளில் வைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அதற்கு முன்பதாக இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார். (ம-7,9,60)

# பதுளையில் 9 கைதிகள் தப்பியோட்டம்

(பதுளை)

பதுளை - தல்தெண பகுதியிலுள்ள இளம் குற்றவாளிகளின் பயிற்சி பாடசாலையிலிருந்து 09 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த கைதிகள் நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்றவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஏனையோரை தேடும் பணிகளில் பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

# முல்லையில் சட்டவிரோத கடற்றொழிலை கட்டுப்படுத்துக

## வட்டுவாகல் கடற்படை முகாமை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டம்

முல்லைத்தீவு கடலில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையினை கட்டுப்படுத்தக் கோரி வட்டுவாகல்கடற்படை முகாமை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு கடலில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சுருக்கு வலை மற்றும் ஒளிபாச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த கோரி வட்டுவாகல் பாலத்தில் இருந்து கோட்டாபய கடற்படை முகாம் வரை சென்ற மீனவர்கள் அங்கு கடற்படை முகாமை முற்றுகையிட்டு தங்கள் கவனயீர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தினை சேர்ந்த கடற்றொழில் அமைப்புக்க்ள் ஏற்பாடு செய்த இந்த கவனயீர்ப்பு போராட்ட நடவடிக்கையின்போது முல்லைத்தீவு கடலினை நம்பி 5ஆயிரத்திற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிலையில் சாலை தொடக்கம் கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் சுருக்குவலை ஒளிபாச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் கடற்றொழில் அமைச்சருக்கு மீனவர்களின் போராட்டம் தொடர்பில் தெரியப்படுத்தியதையடுத்து அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக கடற்றொழில் அமைச்சர் உறுதியளித்தார்.

இந்நிலையில் மீனவர்களின் போராட்ட கைவிடப்பட்டது. (ம-7,9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாள்ள புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 [illegible] மாவட்டத்தில் [illegible] ராஜன்குளம், ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவமுகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர்கோபுரம், புதுக்குளம், புதூர்கிராமம், புதுவிளாங்குளம், விக் [illegible] குளம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆசிக்குளம், எல்லப்பர் மருதுங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், கோவில்குளம் 10ஆம்ஒழுங்கை, மகாறம் பைக்குளம், மதுரநகர் கல்நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம் பரபுரம் ஆகிய பிரதேச ங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 03

உட்பகுதியில் வெண்மணல் திட்டுக்களும் ஆங்காங்கே குழிகளும் காணப்படும்.பசும் புல் தரைகளும் உண்டு.நடுப்பகுதி கல்லு மலை என அழைக்கப்படும்.இது கடல்மட்டத்திலிருந்து 20 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

1976 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு முன் இரு தேசங்களையும் சேர்ந்த மீனவர்களும் கச்சதீவுக்கு சென்று மீன் பிடிப்பது உண்டு. அங்கு சற்று ஓய்வு எடுத்து, மீன் வலைகளை காய வைப்பது உண்டு. கச்சதீவில் குடிதண்ணீர் இல்லை என்பதால், அங்கு மக்கள் நிரந்தரமாக தங்குவதில்லை.

**வாலி தீவு**

கோடிக்கணக்கான இந்து மதத்தினர் நம்பும் ராமாயண இதிகாசத்தில் ஸ்ரீராமரும், வாலியும் போரிட்ட தீவுதான் கச்சதீவு என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. 23.07.1974 இல் நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில், அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பிற்கால பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் கச்சதீவை, 'வாலி தீவு' என கூறியுள்ளார்.

**இலங்கையில் ஐந்து சஞ்சீவனி துளிகளில் கச்சதீவும் ஒன்று.(இணையத்திலிருந்து)**

த்தில் சஞ்சீவனி ஒரு மாயாஜாலமாக விபரிக்கப்பட்டுள்ளது.

ராமர் மற்றும் லக்ஷ்மணர் இருவரும் மிகவும் சக்திவாய்ந்த அம்புகளால் கடுமையாக காயமடைந்து மயங்கிவிழுந்ததாக நம்பப்படுகிறது. எனவே, உயிர்காக்கும் மூலிகைகளை மீண்டும் உயிர்ப்பிக்க இமயமலையில் இருந்து கொண்டு வருமாறு அனுமான் அறிவுறுத்தப்பட்டார். அதனால் உயிர் காக்கும் மூலிகைகளை மட்டும் அடையாளம் காண முடியாதநிலையில் மலைக்கு சென்ற அனுமன் மலையின் பகுதியை தூக்கி இலங்கைக்கு கொண்டுவந்தார்.

அவர் மலையை சுமந்து இலங்கை செல்லும் போது, கச்சதீவு உட்பட இலங்கையின் ஐந்து இடங்களில் மலையின் சிலபகுதிகள்கீழே விழுந்ததாக நம்பப்படுகிறது. மற்ற 4 சஞ்சீவனி துளிகள் காலியில் ருமஸ்சல, ஹிரிபிட்டியவில்டோலுகந்த, ஹபரணை அநுராதபுர வீதியில் ரித்திகல, மன்னாரில் உள்ள தள்ளாடி என்பனவாகும்.

**இலங்கையில் ஐந்து சஞ்சீவனி துளிகள் இருப்பதாக ராமாயணக் கதைகள் கூறுகின்றன. அவற்றில் ஒன்றுதான் கச்சதீவு என்ற கருத்தும் உண்டு.**

கிராமத்தைச். சார்ந்த அந்தோனிப்பிள்ளை எனும் மீனவர் அக்கோவிலுக்கு ஓடுகள் வேய்ந்தார்.

**இந்த ஆலயம் 1913 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும், இது ஒரு கத்தோலிக்க தேவாலயமாகும். இங்கு ஆண்டு தோறும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது.**

கச்சதீவு அந்தோனியார் திருவிழா இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த இரு நாட்டு மக்களும் சந்தித்து பொருட்களை பண்டமாற்று செய்ய வழி வகையாக இருந்துள்ளது. இருநாட்டு மக்களும் சங்கமிக்கும் அமைதித் தீவாக விளங்கிய கச்சதீவு 1975 ஒப்பந்தத்திற்குபின் இலங்கைக்குச் சொந்தமானது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளின் கடல் எல்லைகளை பகிர்ந்து கொள்வதாலும், இலங்கையால் அறிவிக்கப்பட்ட புனிதத்தலமாக இருப்பதாலும் ஒரு தனித்துவமான வழிபாட்டு தலமாகும்.

அந்தோனியாரால் தங்கள் உயிர் காப்பாற்றப்பட்டதாகக் கூறிய அவர்கள் தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியுடன் தீவுக்குத் திரும்பி புனித அந்தோனியாருக்கு தேவாலயம் கட்டியுள்ளனர். இதுவே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நடுவில் அமைந்துள்ள கச்சதீவு தீவாகும். அத்தேவாலயம் கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயம் எனப் பெயர்மாற்றம் பெற்று கிறிஸ்தவர்களால் போற்றப்படுகிறது.

அதுமட்டும் அல்ல. சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் படகு கவிழ்ந்து 17 மணித்தியாலங்கள் உயிருக்குப் போராடிய நிலையில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவும் சென்றடைந்தது கச்சதீவுக்குத்தான்.

**கச்சதீவு உரிமைப் பிரச்சினையின் ஆரம்பம்**

1955ஆம் ஆண்டு, இலங்கை அரசு திடீரென்று, கச்சதீவினைத் தன் கடற்படை வீரர்களுக்குப் பயிற்சி தரும் இடமாகத் தேர்ந்

யாழ்ப்பாணத் தீவுகள்




கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயம்



இலங்கையில் ஐந்து சஞ்சீவனி துளிகள் இருப்பதாக ராமாயண உண்மைகள் கூறுகின்றன. இந்து மதத்தின்படி சஞ்சீவனி ஒருமந்திர மூலிகையாகும், இது கடுமையான நோய்களை குணப்படுத்தும் வலிமையான சக்திகொண்டது. இம்மூலிகையில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் மரணம் கிட்டத்தட்ட நிச்சயமான சூழ்நிலையில் உயிர்ப்பிக்கும் என்று நம்பப்பட்டது. இந்திய இதிகாசமான ராமாயண

**கச்சதீவு புனிதஅந்தோனியார் ஆலயம்**

மனிதர்கள் யாரும் வசிக்காத இந்தத் தீவில் புனித அந்தோனியார் தேவாலயம் ஒன்றும் அமைந்திருக்கிறது. புனித அந்தோனியார் தேவாலயம் அல்லது புனித அந்தோனியார் திருத்தலம் சீனி குப்பன் படையாட்சி என்பவரால் கச்சதீவில் கட்டப்பட்டது. [illegible] இராமேசுவரம் [illegible]

**புனித அந்தோனியார் தேவாலய தோற்றம் பற்றி இணையத்தில் இருந்து .....**

இத் தேவாலயம்பற்றி ஒரு கதையுள்ளது. 1908 ஆம் ஆண்டு இரண்டு இந்திய மீனவர்களை ஏற்றிச் சென்ற மீன்பிடிப்படகு விபத்துக்குள்ளானது. கடலின் நடுவில் யாரும் இல்லை. இருவரையும் விரை வாக கரைக்கு அழைத்துச் செல்ல இருவரும் புனித அந்தோனியாரின் உதவிய்ய நாடினர். தாங்கள் கரையேறும் நிலத்தில் புனித அந்தோனியாருக்கு தேவாலயம் கட்டுவதாக இருவரும் உறுதிமொழி எடுத்தனர்.

இரண்டு மீனவர்களும் மிதந்து சென்று ஒருதீவை அடைந்தனர். மீனவர்கள் இருவரும் சொந்த ஊர் திரும்பியதும் மற்றவர்களிடம் இது பற்றி தெரிவித்தனர். புனித

தெடுத்தது. இந்திய அரசு அந்த முடிவைக் கண்டித்தது. 1956ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அரசு மீண்டும் கச்சதீவைக் கடற்படைப் பயிற்சிக்குப் பயன்படுத்த முடிவெடுத்தது. இந்த முடிவை இந்திய பாராளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள்.

அன்றிலிருந்துதான் கச்சதீவு விவகாரம் வெளிப்படையாக இந்தியப் பொதுமக்களுக்குத் தெரிய வந்தது. இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள், "இலங்கை அரசு இந்திய எல்லைக்குள் இருக்கும் போர் முக்கியத்துவம் வாய்ந்த கச்சதீவில் நுழையப் பார்க்கின்றது" என்று இலங்கை அரசைக் கண்டித்தார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒரே பிரசவத்தில்...

குருநாகல் தோரயாய பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரே இவ்வாறு நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

இந்த பிரசவத்தில், மூன்று ஆண் குழந்தைகள்மற்றும்ஒரு பெண்குழந்தை பிறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிறக்கும்போது 1.3 கிலோ கிராம் மற்றும் 1.1 கிலோ கிராம் எடையுடன் இருந்த குழந்தைகள், விசேட சிசு சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், மிகவும் அர்ப்பணிப்புடனும் அன்புடனும் அவர்களைப் பார்த்துக்கொள்வதாகவும் இந்த குழந்தைகளின் தந்தை புத்திக ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## ரயில் மோதியதில்...

இச்சம்பவத்தில் சிவசுப்பிரமணிய சர்மா என்ற 80 வயதான ஓய்வுபெற்ற ஆசிரியரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார்.(ம-7,9,33,104)

## பாம்புக்கடிக்கு...

முன்னாள் போராளி ஒருவர் பாம்புக் கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் (வயது-47) என்ற குறித்த முன்னாள் போராளி கிழவன்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

இதையடுத்து குறித்த நபர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். (ம-7,9)

## முல்லையில்...

பதுளையைச் சேர்ந்த டபிள்யு.எம். எல்.பி. வணசிங்க என்ற குறித்த கடற்படை வீரர் கோட்டாபய கடற்படைத் தளத்தில் புலனாய்வாளராக பணியாற்றி வந்துள்ளார்.

இவர் (15.04.2023) இரவு நித்திரைக்குச் சென்ற நிலையில் நேற்று முன்தினம் காலை கடற்படை தளத்தில் உள்ள அவரது படுக்கையறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நேற்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## அம்மன் சிலையை...

வதற்குக் கட்டளையிடுமாறு, யாழ்ப்பாண பொலிஸார் யாழ்.நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனு தொடர்பான விசாரணை இன்று (18) யாழ்.நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் நேற்று மாலை நல்லை ஆதீனத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலிலேயே மேற்படி கோரிக்கையை சைவ சமயத் தலைவர்கள் கூட்டாக முன்வைத்துள்ளனர்.

இதில் உரையாற்றிய நல்லை ஆதீன முதல்வர் மற்றும் அகில இலங்கை சைவ குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் சிவஸ்ரீ மகாலிங்கசிவக்குருக்கள், இந்து சமயப் பேரவையின் செயலாளர் சக்திகிரீவன் ஆகியோர் மேற்படி அம்மன் சிலை தொடர்பான வழக்கில் எமது சட்டத்தரணிகள் அனைவரும் ஆஜராகி அம்மன் சிலையை பாதுகாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். (ம-7)

## வலி.வடக்கு...

குறித்த பெண், வீட்டின் வளாகத்தினுள் தனக்கு தானே தீ மூட்டி தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

அதனை அவதானித்த வீட்டில் இருந்தோர் தீயினை அணைத்து காப்பாற்றிய போதிலும், அவர் கிணற்றினுள் குதித்துள்ளார். கிணற்றில் இருந்து காப்பாற்றி தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுகிர்தனிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார்.(ம-7,9,33,104)

## வடக்கு, கிழக்...

பிரேமச்சந்திரனின் இல்லத்தில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் நடந்த கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

குறித்த சந்திப்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியினர், தமிழ்த் தேசிய கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. இதனால், அன்றைய தினத்தில் வடக்கு, கிழக்கு தழுவிய கதவடைப்பை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ம-7,9,33)

## அரசி...

மதன்ஜீத் சிங் விரிவுரையின் போது, அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசிய அறக்கட்டளை மற்றும் சென்னை ஆசிய இதழியல் கல்லூரி என்பன இதனை இணைய வழியாக ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வின்போது மேலும் தமது கருத்துக்களை பதிவுசெய்த சந்திரிகா குமாரதுங்க, எழுபத்தைந்து ஆண்டுகள் என்பது ஒரு தேசம் கணிசமான முன்னேற்றத்தை அடைய எடுக்கும் நீண்ட காலமாகும்.

இந்த நிலையில் காலனித்துவ ஆட்சியாளர்களால் 450 வருடங்கள் அழிக்கப்பட்ட பின்னரும் கூட, சுதந்திரத்தின் போது, இலங்கை சிறந்த சமூக-பொருளாதார குறிகாட்டிகளில் சிலவற்றைக் கொண்டிருந்தது. எனினும் இன்று 75 வயதில், இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடாக மாறிவிட்டது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷர்களை குற்றம் சாட்டிய அதேவேளை, ஊழல் மற்றும் முறையான தேசத்தை கட்டியெழுப்புவதில் இலங்கையின் தோல்வியே தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும் என முன்னாள் ஜனாதிபதி குறித்த நிகழ்வின் பின்னரான செவ்வியில் குறிப்பிட்டதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

ராஜபக்ஷக்கள் காலத்தில், நீதித்துறை, பொலிஸ் மற்றும் பொதுச் சேவை உட்பட ஜனநாயக நிர்வாகத்தின் முக்கிய தூண்களில் பரவலான ஊழல் ஊடுருவியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் இலங்கை, பல்லின மற்றும் சகல மத சமூகங்களை ஒன்றிணைத்து ஒரு ஐக்கிய பன்மைத்துவ அரசை உருவாக்கத் தவறிவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு, அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமைகள் மற்றும் சிறுபான்மையினருடன் அரசியல் அதிகாரப் பகிர்வு முறையை உறுதிப்படுத்த கடந்த 75 ஆண்டுகளாக தவறிவிட்டோம் என இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகித்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் தெரிவித்தார். (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1544
வெற்றி இலக்கங்கள்
கன்னி 3 9 1 6 6 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1119
Y 04 17 33 50

கொவிசெத
திகதி 2023.04.17
சீட்டிழுப்பு இலக்கம் 3331
W 37 38 43 44
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1437
N 19 28 32 76 78

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.04.17
சீட்டிழுப்பு இலக்கம் 398
மகரம் 24 25 37 58 மகரம்

மஹஜன சம்பத
திகதி 2023/04/17
சீட்டிழுப்பு இலக்கம் 5089
A 0 0 5 9 1 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2063 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.04.12 தினம் புதன்கிழமை
A 45 66 71 73
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,530,280/-
DLB www.dlb.lk

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.12
சீட்டிழுப்பு இல : 4224
ரூ. 5,368,020/-
24 52 56 73 X
DLB

ராசி
ரூ. 2,628,468.20
திகதி 2023-04-12
வெற்றி வாரம் 3775
வர்ணம் பச்சை
11 21 27 57
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,477,940/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 31 21 54 72 76
1239
2023.04.12 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 323,348,056.20
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

ஜயட
சீட்டிழுப்பு வாரம் 1913
சீட்டிழுப்பு திகதி 2023-04-12
07 13 55 62 T
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 41,968,544.40
DLB
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1889
சீட்டிழுப்பு திகதி : 2023.04.12
ரூ. 4,814,160/-
03 18 38 56 U
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள்கூட பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுவார்கள்

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் அஜித் மன்னப்பெரும எம்.பி

(கம்பஹா)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்து சிவில் தரப்பினருடன் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம். வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலம் திருத்தங்களின்றி நிறைவேற்றப்பட்டால் ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூட பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடுமையான விமர்சனங்கள் காணப்படுகின்ற பின்னணியில் பாரதூரமான ஏற்பாடுகளை உள்ளடக்கிய வகையில், உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்தும்போது சமூகக் கட்டமைப்பில் அமைதியின்மை நிலவும். மக்கள் போராட்டம், எதிர்ப்பு ஆகியவற்றில் இருந்து அரசாங்கத்தை பாதுகாப்பதற்காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7.9)


## உடனடி வேலை வாய்ப்புக்கள்



EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6375) **V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Account Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு

**077 367 1062** (15289)

## வீடு விற்பனைக்கு

அரியாலை மாம்பழம் சந்தியில் இருந்து 1½ km தூரத்தில் சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு (1 பரப்பு) உடன் விற்பனைக்குண்டு.
(விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்)

**076 651 7648** (15285)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6375)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI (15283)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## காணி விற்பனைக்கு

கோப்பாயில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(மானிப்பாய் - கைதடி, பருத்தித்துறை வீதிகளிலிருந்து 300M)

**076 342 4705** (15278)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15291)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15287)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை

**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.** (15287)

**077 076 0389**
**076 911 9371**
**076 739 0413**


## 1ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1940 - 12 - 16

மறைவு 2022 - 04 - 29

### அமரர் கந்தையா குலசிங்கம்

(மூத்த ஊடகவியலாளர், முன்னாள் தலைவர்
- யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சமாசம்)

**திதி:- 18.04.2023**

இவ்வுலகில் அன்பைச் சொரிவதற்கு
ஆயிரம் உறவுகள் இருக்கலாம். ஆனாலும்...
உள்ளார்ந்த நேசத்தை, உன்னதமான பண்புகளை,
உயர்வான ஆளுமையை
எங்களுக்கு இனிமேல் எவர் தருவார்?
உங்கள் நினைவுகளின் வழித்தடத்தில்
உருக்கமுடன் பயணிக்கின்றோம்.

(15290)

நீங்கா நினைவில்: குடும்பத்தினர்
வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.